Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-31 | 16-08-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-180


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)

### இரண்டாவது சனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னான

# முதலாவது சத்தியப் பிரமாணத்தையே பதவிப் பிரமாணமாக ஏற்றுள்ளோம்!

## உயர் நீதிமன்றத்திற்குக் கடிதம் மூலம் தேர்தல் ஆணையாளர் தயானந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**1999ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக வெற்றி பெற்றபின் சனாதிபதி முதல் தடவையாக மேற்கொண்ட பதவிப் பிரமாணத்தையே தாம் உத்தியோகபூர்வ பதவிப் பிரமாணமாக ஏற்றுக்கொண்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார். தமது சட்டத்தரணி எல்மோ பெர்ணாந்துவின் ஊடாக நேற்று உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையாளர் தமது கருத்தை எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.**

1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதியே சனாதிபதி இரண்டாவது பதவிக்காலத்திற்காக உத்தியோகபூர்வ பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் என்ற அடிப்படையில் தாம் சனாதிபதித் தேர்தலுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சராக ஆனந்தசங்கரி நியமிக்கப்படலாம்

### – இந்தியாவும் பௌத்த பேரினவாதிகளும் விரும்புகின்றனராம்

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய வெளிநாட்ட மைச்சராக ஆனந்தசங்கரி நியமிக்கப்படலாம் என கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது. இந்தியாவும் சில பௌத்த பேரினவாதிகளும் இதன் பின்னணியில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இதே வேளை, புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிப்பது தொடர்பில் ஆனந்தசங்கரி மற்றும் சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரின் பெயர்களை சனாதிபதி சிபாரிசு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளைத் தீர்மானிக்கும் மிக முக்கிய பதவியான வெளிவிவகார அமைச்சராக இந்தியாவிற்கு சார்பான ஒருவர் நியமிக்கப்படுவதையே இந்தியா விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியா

(12ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமரின் பூதவுடல் சுதந்திர சதுக்கத்தில் தகனம்



சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்று பூதவுடல் மாலை 6.20 இற்கு தகனம் செய்யப்பட்டுள்ளது. லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியைகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலையில் விடுதலைப்புலிகளை குற்றம் சுமத்துவது போர்நிறுத்தத்தைப் பாதிக்கும்

### – போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் விடுதலைப்புலிகள் தொடர்புபட்டதற்கு குறித்த ஆதாரங்கள் எதுவும் இல்லை என இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹ க்ரப்ஹொக்லண்ட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர்கள் சந்திரிகா சந்திப்பு!

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் ஆகியோர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்றிரவு சந்தித்துப்பேசவிருந்தனர். இதன்போது போர்நிறுத்த ஒப்பந்தத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே தரப்பினருடன் பேசவிருந்ததாக தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை நோர்வேத் தரப்பினர் நோர்வே திரும்புகையில் மீண்டும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் அவர்களை லண்டனில் சந்திப்பர் எனவும் தகவல்கள் கூறுகின்றன. (32)

## கைக்குண்டு வீச்சு

திருகோணமலை பாலையூற்றுப் பிரதேசத்தில் நேற்றுக் காலை வீடொன்றில் கைக்குண்டு வீச்சு நடாத்தப்பட்டுள்ளது. அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் பிரதிநிதியின் வீட்டின் மீதே இந்தத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெடிபொருட்கள் வைத்திருந்ததாக குருநகரில் மூன்று மீனவர்கள் கைது

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டினுள் அபாயம் விளைவிக்கத்தக்க வெடிபொருட்களை கடல் வழியாக கடத்தி வந்ததாகத் தெரிவித்து மீனவர்கள் மூவர் குருநகர்ப்பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பின்னர் இவர்கள் மூவரும் யாழ். பொலிசாரிடம் கையளிக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரு போராளிகள் வீரச்சாவு

10.07.2005 அன்று அன்புவெளிபுரம் எனும் இடத்தில் இலங்கை இராணுவப் புலனாய்வுத் துறையினரின் தாக்குதலின்போது இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

லெப்.கேணல்-டிக்கான்/வேங்கை (செபஸ்தியாம்பிள்ளை-ஜெயச்சந்திரன் 6 ஆம் வட்டாரம் சாம்பல்தீவு திருகோணமலை)

வீரவேங்கை-இளம்புலி (குணசிங்கம்-அனுசன் 6 ஆம் கட்டை பெரியகுளம் நிலாவெளி திருகோணமலை 8ஆம் வட்டாரம் ஆத்தி மோட்டை சாம்பல்தீவு திருகோணமலை)

ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர். இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தை சுற்றிவளைத்து படையினர் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பரமேஸ்வராச் சந்தியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் - அங்கு தங்கியிருந்த மாணவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தாக்குதல் நடத்தவும் முயற்சித்துள்ளனர்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அதிகாலை வேளை, யாழ். பரமேஸ்வராச் சந்தியில் இருக்கும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தையும், அதனுடன் இணைந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகத்தையும் சுற்றிவளைத்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் ஆயுதங்கள் சகிதம் அலுவலகத்துள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுவாகல் ஆற்றங்கரையில் திரிசாரண மாணவர் பாசறை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு, துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் முல்லை வலய கல்விப் பணிப்பாளர், ப. அரியரத்தினம் தலைமையின் கீழ் முல்லை மாவட்ட திரிசாரண அமைப்பினால், அனைத்து முல்லை மாவட்ட மாணவர்களையும் ஒருங்கிணைத்து பாசறை நிகழ்வு முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றங்கரையில் நாளை தொடக்கம் 19 ஆம் திகதி வரை இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கின்ற அகில இலங்கை ரீதியான சிம்போறி நிகழ்வின் ஒத்திகை நிகழ்வாக இது நடைபெறுகின்றது. இதில் நீச்சல், படகு வலித்தல், கட்டுமரம் வலித்தல், மரம் ஏறுதல், பாலம் கடத்தல், கயிற்றில் நடத்தல், பாசறை அமைத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும்.

முல்லை மாவட்டத்திலுள்ள சாரண மாணவர்கள் இன்று பிற்பகல் நான்கு மணிக்கு சாரண பாசறை பொருட்களுடன் சமூகமளிக்கவும். இதன் விபரங்களை அறிய விரும்பும் பாடசாலை அதிபர்கள் வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும். இதில் கலந்துகொள்ளுகின்ற சாரணர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. 18 ஆம் திகதி இரவு தீப்பாசறை நிகழ்வு நடைபெறவுள்ளது.

பாசறை அமைப்பதற்கு கலந்துகொள்ள முடியாத சாரண மாணவர்கள் பாசறையைப் பார்வையிட அனுமதிக்கப்படுவர். அத்தோடு, வலயக் கல்விப்பணிமனையின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் இதனைப் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (08)

## தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவான கிளி. ம.வி.மாணவர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடகிழகத்து மாகாண மட்டத்திலான தமிழ் மொழிக் கலைத் திறன் போட்டியில் திறந்த பிரிவில் நாடகப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று தேசிய ரீதியான போட்டிக்குத் தெரிவாகி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் மாவட்ட அரசாங்க அதிபரால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வானது நேற்று மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி அழகியல் கலாமன்ற சுப்பையா மண்டபத்தில் அழகியல் கலாமன்ற அதிபர் விஜயசேகரன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றிவைக்க கலாமன்றக் கொடியினை அதிபர் ஏற்றி வைத்தார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து கிளிநொச்சி மகாவித்தியாலய பிரதி அதிபர் அ.பங்கையற்செல்வன் மாணவர்களின் நாடக வெளிப்பாட்டினையும், வெற்றி பெறுவதற்காக அயராது உழைத்த மாணவர்களது செயற்பாடுகளைப் பற்றியும் கருத்துரை வழங்கினார். அடுத்து கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து நாடகப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான பரிசில்களை கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட கல்விகழகப் பொறுப்பாளர் அறிவன்பன், தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் நாடகத்தில் பங்குகொண்ட மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு.தீ)


# தமிழீழ தேசியத்தொலைக்காட்சியின்
# திருத்தப்பட்ட தொழிநுட்பத் தகவல்

**Satellite: Eurosat Ku 45°E**
**Azimuth :258°**
**Frequency: 11506 Mhz**
**Symbol rate :2.894 MS/s**
**Polarity :Vertical**
**FEC: 3/4**

மின்னஞ்சல்: info@tamilntt.com T.P. No. 0212285816

(சி.12555)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
திரு. கந்தையா பேரம்பலம்
(ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்)

பிறப்பு:-1929-04-28 இறப்பு:-2004-07-28

அன்புடனே அப்பா என்று அழைத்து
ஆண்டொன்று ஆனதையா
கண்டதெல்லாம் கனவாகிக்
கணப் பொழுதில் கலைந்ததுவே
பண்புடனே பார்த்து வந்தோம்
பாரை விட்டுப் போன தேனோ
இன்புடனே வளர்த்தீர் எம்மை
இப்படி ஏன் தவிக்க விட்டீர்
ஆண் டொன்றென்ன உம் நினைவு
ஆயுள் வரை நிலைத்திருக்கும் எம் மனதில்

3 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

(சி.12530)

தகவல்:-
குடும்பத்தினர்.



## 6 ஆம் வருட நினைவுகளில்...



தாய் மடியில் மைந்தனாய் 1978-06-26
தாய் மண்ணின் மைந்தனாய் 1999-08-16

**கப்டன் மகேசநாதன்**
**(சேனாதிராசா ஜெயச்சந்திரன்)**

சம்பவம்:- கிளிநொச்சிப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில்

தமிழ் மண்ணின் மானம் காக்க
தாய் அன்பை விட்டெறிந்து
தாய்நாட்டைக் காக்கவென்று
தரணி போற்றும் வீரனானாய்
ஆண்டு ஆறு சென்றாலும்
ஆறாது எம் நினைவு

நினைவு கூரும்
தந்தை, தாய், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(சி.12521)





## 16.08.2005
## நிலவுடன் நான்கு வருடங்கள்...

கூடுவிட்டுப் பிரிந்த குருவிகளின்
மகத்துவமான தேடலொன்றில்
ஒன்றாக ஒரு கூடுகட்டி வாழும்
இந்த வாழ்வின்
தவிர்க்கவியலாத நியதியாய்
ஆழி வெளியின் நிர்மலத்தை நோக்கி
ஒவ்வொன்றாய்ப் பறக்கும் குருவிகள்
துயருற்று. துயருற்று இருக்கும்
குருவிகளின் வாழ்வு நீழும்...
அதே கூட்டில் அதே வாழ்வில்.

குடும்பத்தினரும்
நண்பர்களும்


(சி.12556)

## மேஜர் நிலவின்
**இரங்கசாமி மதுசங்கர் - திருமலை**

# தீவிரவாதிகள் எங்களைத் தோற்கடிக்க முடியாது இது என்னுடைய காலத்தில் நடக்காது - ஜோர்ஜ்புஷ்

(வோஷிங்டன்)

**தீவிரவாதிகளால் அமெரிக்கப்படைகளை தோற்கடிக்க முடியாது. நாங்கள் எங்களின் மன உறுதியை இழந்தால் மட்டுமே, தீவிரவாதிகள் எங்களை வெற்றிகொள்ள முடியும். இது என்னுடைய காலத்தில் நிச்சயம் நடக்காது என எச்சரிக்கிறார் புஷ்.**



அவர் மேலும தெரிவிக்கையில்“தற்போதைய சூழ்நிலையில் ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறும் எண்ணம் இல்லை”

ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக தீவிரவாதிகள் நடத்திவரும் தாக்குதலினால் எங்களின் மன உறுதியைக் குலைத்துவிட முடியாது. ஈராக்கில் தற்போது நெருக்கடியான சூழல் நிலவி வருகிறது. எனவே, அரசியல் மற்றும் இராணுவ ரீதியான உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து வழங்கி வருகிறது. அங்கு அமைதியான சூழல் ஏற்படும் வரை படைகளை வாபஸ் பெறும் எண்ணம் இல்லை. தற்போதைய சூழலில் ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படைகளை வாபஸ் பெற்றால், தீவிரவாதத்திற்கு எதிராக நடத்திய போர் அர்த்தமற்றதாகிவிடும். தீவிரவாதிகளால் அமெரிக்கப்படைகளை தோற்கடிக்க முடியாது. நாங்கள் எங்களின் மன உறுதியை இழந்தால் மட்டுமே, தீவிரவாதிகள் எங்களை வெற்றிகொள்ள முடியும். இது என்னுடைய காலத்தில் நிச்சயம் நடக்காது என எச்சரிக்கிறார் புஷ்.

ஈராக்கில் சனநாயக ஆட்சிமுறை முழுமையாக அமுல்படுத்தப்படும்வரை அமெரிக்கப்படைகளை வாபஸ் பெறும் எண்ணம் இல்லை. ஈராக்கில் சுதந்திரமான சனநாயக ஆட்சியை நிலைநிறுத்தவும், தீவிரவாதிகளின் குறுக்கீடுகள் இன்றி தன்னிச்சையாக ஈராக் அரசு செயற்படவும், பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும் தேவையான உதவிகளை அமெரிக்கா வழங்கி வருகிறது என புஷ் கூறினார்.

## தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல் பாக்தாத்தில் படையினர் ஐவர் பலி

(பாக்தாத்)

தீவிரவாதிகள் வீதி ஓரம் புதைத்து வைத்த வெடிகுண்டுகளில் சிக்கி அமெரிக்கப்படையினர் ஐந்துபேர் பரிதாபமாக உயிரிழந்ததுடன். மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று பாக்தாத்திலிருந்து 180 கி.மீ தொலைவில் உள்ள தூஸ் நகரில் அமெரிக்கப்படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது தீவிரவாதிகள் புதைத்து வைத்த வீதியோர வெடிகுண்டு வெடித்ததில் மூன்று அமெரிக்க படையினர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நடைபெற்ற 24 மணிநேரத்தில் பாக்தாத் நகரிலும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவ வாகனம், தீவிரவாதிகள் புதைத்துவைத்த வெடிகுண்டில் சிக்கியது. இதில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் உயிரிழந்தார். நேற்று முன்தினம் அதிகாலை பாக்தாத்தின் வடக்குப் பகுதியின் ஜோர்டான் நாட்டின் எல்லையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒரு அமெரிக்கப் படை வீரர் உயிரிழந்தார். இந்த மூன்று சம்பவங்களிலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

# காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றம்



காஸா நிலப்பரப்பிலுள்ள யூதக்குடியேற்றப்பகுதிகளை அகற்றும் பணியின் ஒரு கட்டமாக இஸ்ரேல் தனது எல்லைப் பகுதிகளில் இருந்து வெளியேறத் தொடங்கியுள்ளது.

இந்த நடவடிக்கையின்போது ஆக்கிரமிப்பாளர்கள் புதன் கிழமைக்குள் எல்லைகளை காலி செய்ய வேண்டுமென்றும் இல்லையேல்அவர்கள் அகற்றப்படுவார்கள் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாக 21 ஆக்கிரமிப்பு பகுதிகளிலிருந்து ஒன்பதாயிரத்திற்கும் அதிகமான குடியேற்றக்காரர்கள் தமது குடியிருப்புக்களை காலி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதற்கான உத்தரவுக்கடிதமும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை எதிர்க்கும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் மறைமுகமாக ஊருக்குள் பதுங்கியிருக்கலாம் எனவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.



ஈராக்கின் பாக்தாத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட பொதுமகன் ஒருவரின் பூதவுடலை எடுத்துச்செல்லும் மக்கள்.

## தீவிரவாதிகள்-இராணுவத்தினர் மோதல் ரஷ்ய அதிகாரிகள் மூவர் பலி

(மொஸ்கோ)

செச்னிய தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் ரஷ்ய அதிகாரிகள் மூன்று பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

செச்னியாவின் தென்பகுதியில் உள்ள ரஷ்ய உயர் அதிகாரியின் வீட்டிற்கு செச்னிய தீவிரவாதிகள் தீ வைத்தனர். அவரது மகனையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். இச்சம்பவத்தில் உயர்அதிகாரி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இதனை அடுத்து இராணுவ அதிகாரி தலைமையில் அதிகாரியின் மகனைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. நேற்று முன்தினம் அதிகாலை தேடுதல் வேட்டையின் போது ரஷ்ய இராணுவத்திற்கும் செச்னிய தீவிரவாதிகளுக்கும் இடையே சண்டை மூண்டது. அப்போது தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு வீச்சில் ரஷ்ய இராணுவ அதிகாரி உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர். இரண்டு இராணுவ அதிகாரிகள் படுகாயமடைந்தனர்.

## பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் தொடர்பா? லண்டன் முஸ்லிம் சபை மறுப்பு

(லண்டன்)

லண்டன் குண்டுவெடிப்பில் முஸ்லிம் அமைப்பினருக்குத் தொடர்பு இருக்கிறது என்ற குற்றச்சாட்டை பிரிட்டன் முஸ்லிம் சபை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

லண்டனில் கடந்த மாதம் ஏழு மற்றும் 21ஆம்திகதிகளில் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடந்தன. இதில் முஸ்லிம் தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். இது குறித்து ‘ஒக்சேபர்’ பத்திரிகை ஒன்று கூறுகையில், ‘தீவிரவாதிகளுக்கும் பிரிட்டனில் உள்ள முஸ்லிம் அமைப்புக்களுக்கும் தொடர்பு உள்ளது. பாகிஸ்தான் அரசியலில் தீவிரவாத கொள்கை உடையவர்களுடன் பிரிட்டன் முஸ்லிம் அமைப்புக்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது’ என்று குற்றம் சாட்டப்பட்டது. இது குறித்து பிரிட்டன் முஸ்லிம் சபையில் தலைவர் இக்பால் ஸ்கிரேனி கூறுகையில், ஒக்சேபர் பத்திரிகையில் வந்துள்ள செய்தி முற்றிலும் தவறானது. முட்டாள்த்தனமானது” என்று திட்டவட்டமாக மறுத்தார்.

கடந்த மாதம் ஏழாம் திகதி லண்டனில் தாக்குதல் நடந்த பின், பிரிட்டன் முஸ்லிம் சபையைப் பொலிசார் தொடர்ந்து கண்காணிக்கத் தொடங்கியுள்ளனர். சபையில் உள்ளவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுடைய பின்புலங்கள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர் என்பது குறிபபிடத்தக்கது.



ஈராக்கில் கிருக் நகரில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட முவாமர் அல்ஜபுரியின் உடலை அப்புறப் படுத்த ஆயத்தமாகும் பொலிஸ் அதிகாரிகள்



இரண்டாம் உலக யுத்தத்தை ஆசிய மக்கள் நினைவு கூரும் நிலையில் சீனாவில் சங்காய் நகரில் 1930 ஆம் ஆண்டு ஜப்பானுக்கெதிரான நடவடிக்கையிலீடுபட்டு மடிந்த ஒருவரின் சிலைக்கு அருகில் நடந்து செல்லும் சீனப் பிரஜை.

# அணு மற்றும் ஏவுகணைத் திட்டம் தொடரும் சுதந்திரதின உரையில் பாகிஸ்தான் பிரதமர்



(இஸ்லாமபாத்)

அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்கள் தொடரப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீஸ் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் 59 ஆவது சுதந்திர தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. வழக்கத்துக்கு மாறாக பாகிஸ்தானில் இந்தாண்டு தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகம் இருந்தது. எனவே இஸ்லாமபாத்தில் உள்ளரங்கம் ஒன்றில், அந்நாட்டுத் தேசியக்கொடியை பிரதமர் சவுகத் அஜீஸ் ஏற்றினார். பின் அவர் ஆற்றிய சுதந்திர தின உரையில்; நாட்டின் சுதந்திரத்துக்கு மிரட்டலை ஏற்படுத்தியுள்ள தீவிரவாதத்தை நிராகரிக்கவும், தோற்கடிக்கவும் பாகிஸ்தான் ஒன்றுபடவேண்டும். தெற்காசியாவில் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டுமானால் நீண்ட காலமாக உள்ள காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முக்கியம். தீவிரவாதத்தை நாம் நிராகரிக்கிறோம். அதற்கு எதிராக ஒன்றுபட்டுள்ளோம் என்ற தகவலை உலக நாடுகளுக்கு நாம் தெரிவிக்க வேண்டும்.

தீவிரவாதத்தால் பாகிஸ்தானும் பாதித்துள்ளது. நாட்டின் சுதந்திரத்துக்கு தீவிரவாதம் மிகப்பெரிய ஆபத்தாகவுள்ளது. நாட்டின் சுதந்திரத்தைக் காக்க, இந்த ஆபத்தை நாம் எதிர்த்துப் போராட வேண்டும். எல்லா மட்டத்திலும் அதைத் தோற்கடிக்க வேண்டும். காஷ்மீர் மிக முக்கியமான பிரச்சினை. நிரந்தர அமைதி ஏற்பட இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இன்றியமையாதது. காஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப இந்தத் தீர்வு அமைய வேண்டும். 1947 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவும் பாகிஸ்தானும் மூன்று முறை போர் செய்துள்ளன. அவற்றில் இரண்டு போர் காஷ்மீர் பிரச்சினைக்காக நடந்துள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டில், நான்காவது போரின் விளிம்புக்குச் சென்றோம். ஆனால் 2003 ஆம் ஆண்டின் இறுதியில் காஷ்மீரில் சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பின் தூதரக பயணங்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் மூலம் அமைதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பினும் காஷ்மீர் பிரச்சினையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் சாதிக்கப்படவில்லை. நாட்டின் சுதந்திரம், இறையாண்மை, ஒருமைப்பாட்டைக் காக்கும் வகையில் அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்களைத் தொடர்வதற்கான அனைத்தையும் பாகிஸ்தான் செய்யும் இவ்வாறு அஜீஸ் உரையாற்றினார்.

# லெப்.கேணல் கௌசல்யன் ஞாபகார்த்த மருத்துவ சேவையினால்

# கௌதாரிமுனையில் நடமாடும் மருத்துவ சேவை

**லெப்.கேணல் கௌசல்யன் ஞாபகார்த்த நடமாடும் மருத்துவ சேவையின் மூன்றாவது நிகழ்வு வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களும் கௌதாரிமுனை பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. இதில் பெருமளவு பொது மக்கள் பயனடைந்துள்ளார்கள்.**

முதலாம் நாள் நிகழ்வில் பொதுச்சுடரினை மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் ஏற்றி வைத்தார். அடுத்து, ஈகச்சுடரினை வைத்திய அதிகாரி கதிர், வைத்திய அதிகாரி கலை, தமிழீழ மருத்துவக்கல்லூரியைச் சேர்ந்த சத்தியா ஆகியோர் ஏற்றிவைத்தனர். திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை மருத்துவப் போராளி பூரணி அணிவித்தார். மலரஞ்சலியினை பூநகரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன், கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர், கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இரு தினங்களும் கல்முனை, மன்னித்தலை, வினாசியோடை, கௌதாரிமுனை,வெட்டுக்காடு போன்ற கிராமங்களில் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டது. இரு நாட்களும் 110 குடும்பங்களைச் சேர்ந்த 400 நபர்கள் வீட்டுத் தரிசிப்பு மூலம் சந்திக்கப்பெற்று சுகாதார தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன், சுகாதார விழிப்புணர்வுக் கருத்துக்களும் வழங்கப்பட்டன.

இங்குள்ள மக்களால் மலசலகூடம் எதுவும் பயன்படுத்தப்படவில்லை. இது ஒரு மீனவ விவசாய பிரதேசமாகக் காணப்பட்ட போதும் போசாக்கின்மை அவதானிக்கப்பட்டது. குடிநீர் பற்றாக்குறை இல்லாத போதும் கொதித்தாறிய நீர் பாவனை காணப்படவில்லை. எனவே தெரிவு செய்யப்பட்ட கிணறுகளிற்கு குளோரின் இடப்பட்டது. மிகப் பின்தங்கிய, நிரந்தர மருத்துவ வசதியற்ற, போக்குவரத்து வசதியற்ற இக் கிராமங்களிற்கான மருத்துவசேவையின் போது, கண் மருத்துவம், பல்மருத்துவம்,பொது மருத்துவம் ஆகிய சேவைகளுடன், ஆய்வுகூடசேவை, மற்றும் அல்ட்ராசவுண்ட் ஸ்கானர் பரிசோதனை ஈ.சி.ஜி.பரிசோதனை என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மக்கள் கிராமங்களிலிருந்து மருத்துவ முகாமுக்குச் செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன. இங்கு 251 நோயாளர்களிற்கு சிகிச்சையளிக்கப்பட்டன.

## மின்சாரத்திற்கு பணம் செலுத்தியும் இணைப்பு வழங்க தாமதம் ஏன்?

(அலுவலக செய்தியாளர்)

புதிய மின் இணைப்புக்கள் பல மாதங்களாகியும் மேற்கொள்ளப்படாததினால் புதுக்குடியிருப்பு மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

இலங்கை மின்சார சபையினரால் வழங்கப்பட்டு வரும் மின் விநியோகத்தில் புதிய இணைப்புக்கள் வழங்குவதற்கு என வங்கியில் பணத்தை செலுத்துமாறு கூறிய வேளை மக்கள் பணத்தை வங்கியிலிட்டு பல மாதங்களாகியும் மின் இணைப்பு மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவற்றை துரித கதியில் செயற்படுத்தி மின் விநியோகத்தை வழங்குமாறு மக்கள் வேண்டியுள்ளனர். (கு.08)

## நுண்கலைக் கல்லூரி வளாகத்தில் சிரமதானம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் நுண்கலைக் கல்லூரி சிரமதானப் பணிகள் சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் மல்லாவி கலைக்குழு தலைவர் ம.இராசகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நுண்கலைக் கல்லூரி நிர்வாகிகள் உட்பட கலை குழுவினர்களுடன் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

இவ் நுண்கலைக் கல்லூரி எதிர்வரும் 22 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (24)

## பாடசாலை செல்லும் சிறுவர்களில் 10 வீதத்தினர் விசேட தேவைக்குரியோர்!

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் சிறுவர்களில் பத்து வீதமானோர் பலவிதமான விசேட தேவையுள்ள சிறுவர்களாவரென சிறிலங்கா கல்வியமைச்சின் தகவல்குறிப்பொன்று தெரிவிக்கின்றது. கற்றல் குறைபாடுகளுள்ள இப்படியான விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென விசேட ஆசிரியர் பயிற்சியை வழங்க கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

பத்து வீதமான பிள்ளைகள் சிறு கற்றல், கற்றல் குறைபாடுகள் தொடக்கம் பாரிய குறைபாடுகளை பரவலாகக் கொண்டிருக்கின்றார்கள் எனத் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 1200 பாடசாலைகளில் விசேட கல்விப் பிரிவு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. விசேட கல்வி தேவைப்படும் சிறுவர்களுக்கு கற்பிற்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பான பயிற்சியை வழங்குவதுடன் உரிய வளங்களையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி எதிர்காலத்தில் விசேட கல்விக்குரிய நிலையமாக மாற்றியமைக்கப்படவுள்ளது. யுனிசெப் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் விசேட கல்விக்கு உதவி வழங்கி வருகின்றன. கல்வியமைச்சின் விசேட கல்விப் பிரிவு உளவியலாளர்களின் உதவிகளைப் பெற்று வருகின்றது.

## கோணாவில்-ஸ்கந்தபுரம் வீதியை புனரமைத்து சீரான போக்குவரத்திற்கு வழி செய்க!

(அலுவலகசெய்தியாளர்)

கோணாவில் ஸ்கந்தபுரம் வீதி குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி இதுவரை காலமும் எந்தவித புனரமைப்பு நடவடிக்கைகளும் செய்யப்படவில்லை. இதனால், போக்குவரத்துப் கடும் சிரமத்தின் மத்தியிலேயே நடைபெற்று வருகின்றன. ஸ்கந்தபுரத்தில் இருந்து நோயாளி ஒருவரை கிளிநொச்சி வைத்திய சாலைக்குக் கொண்டு வரவேண்டுமாயின் இந்த வீதியைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என மக்கள் விசனம் அடைகிறார்கள். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு வீதியை புனரமைத்துத் தரும்படி மக்கள கேட்டு நிற்கின்றனர். (தீ)



## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிறப்புற நடந்த வீரமுரசு நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

முல்லை.மாவட்டத்தில் பிரதேச ரீதியில் இடம்பெற்றுவருகின்ற வீர முரசு நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை இரவு 7.30 மணிக்கு புதுக் குடியிருப்பு பிரதேசத்தில் மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் அப்பகுதி தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் லசீசன் தலைமையில் இடம்பெற்றது.

பொதுச்சுடரை கிராம அலுவலர் கந்தசாமி ஏற்றிவைத்தார். தொடர்ந்து இப்பகுதி மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு பெற்றோர்களினால் சுடர்ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சண்முகநாதன், கிராம அலுவலர் கந்தசாமி, வன்னிபாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் ஆகியோர் உரையாற்றினர். சிறப்புரையை முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆற்றினார். (08)

## பால்நிலை சமத்துவ பயிற்சி வழங்கல்

மேற்படி முல்லை. உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர கிராமங்களாகிய மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் மேற்கு, பனையடி, வட்டுவாகல், செல்வபுரம்,, உப்புமாவெளி, அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு ஆகிய இடைத் தங்கல் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு பால்நிலை [illegible]வப் பயிற்சித் திட்டத்தின் கீழ் முதலாம் கட்டமாக அறிமுக நிகழ்[illegible] பெண்கள் குழு அமைத்தல், பெண்களுக்கான மாதாந்த சந்திப்பு எ[illegible]ன கடந்த மாதம் நடத்தப்பட்டுள்ளது.(08)

## சமுதாய மீளமைப்புத்திட்ட அறிமுகக் கூட்டம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தில் நிகொட் நிறுவனத்தின் சமுதாய மீளமைப்புத் திட்டம் தொடர்பான அறிமுகக் கூட்டம் கடந்த புதன்கிழமை பி.ப நான்கு மணியளவில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நளாயினி கேதீஸ்வரன் தலைமையில் செல்வபுரம் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட நிகொட் நிறுவன உதவித்திட்ட பணிப்பாளர் க.ரகு திட்டத்தினை அறிமுகம் செய்து வைத்ததைத் தொடர்ந்து கருத்துரைகளை செல்வபுரம் கிராம அலுவலர் ஐ.திருவருட்செல்வன், பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் சி.இலக்கியன், தமிழீழ நிர்வாக சேவை பிரதிநிதி ஆ.அருளானந்தன் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

## வர்த்தக நிலையங்களை மூடி அதிரடிப் படையினர் அடாவடி!

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று தாண்டியடி வீதி தங்கவேலாயுதபுரத்திலுள்ள இரு வர்த்தக நிலையங்களைப் பூட்டி விட்டுச் செல்லுமாறு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளனர்.


சண்டை தொடங்கப் போகிறது எனவும், படையினர் அச்சுறுத்தியதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து இரு வர்த்தக நிலையங்களையும் பூட்டி விட்டு மக்கள் சென்றுள்ளனர்.

இதே வேளை காஞ்சிரங்குடாப் பகுதியிலுள்ள விசேட அதிரடிப் படையினர் கஞ்சிக்குடிச்சாறு பிரதேசத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு சென்ற பொதுமக்கள் மீது அதிகமான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அடையாள அட்டை கொண்டு செல்லாதவர்களைத் திருப்பி அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### வர்த்தக சங்க நிர்வாகத் தெரிவு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச மல்லாவி நகர் பகுதி வர்த்தக சங்க வலயம் இரண்டுக்கான தெரிவுக் கூட்டம் அரசியல் துறைச் செயலகத்தில் கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு அரசியல் துறைத் தொழிற் சங்கப் பொறுப்பாளர் பெ.தனம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிர்வாகிகள் தெரிவுகளும் இடம்பெற்றதில் தலைவர் க.கனகசபை உப தலைவர் தி.ஜெயராசா, செயலாளர் வீ.மதிவாணன், உப செயலாளர் வீ. அமிர்தலிங்கம், பொருளாளர் சண்முகலிங்கம் ஆகியோருடன் ஒன்பது உறுப்பினர் தெரிவாகினர். (24)



கடந்த 11 ஆம் திகதி அன்று கிளிநொச்சி வலய மட்டத்தில் இடம்பெற்ற விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களையும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (படம்:- குகன்)

# சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் முயற்சி

# கண்காணிப்புக்குழுவிடம் மாணவர் பேரவை முறையீடு

## -யுத்த நிறுத்த மீறல் எனவும் சுட்டிக்காட்டல்

(யாழ்ப்பாணம்)

**இராணுவத்தினர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தைத் தாக்க முயற்சித்தமை தொடர்பாக பேரவையால் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

அந்தமுறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;- நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இராணுவச் சீருடை தரித்த சிப்பாய்கள் தாக்குதல் செய்ய முயற்சித்துள்ளனர். மேற்படிச் சிப்பாய்கள் எமது அலுவலக மதில்களுக்குப் பின்னே பதுங்கி நின்றவாறு கைத்தொலைபேசியில் எமது அலுவலகத் தொலைபேசி இலக்கத்தினை எமது அலுவலகப் பெயர்ப்பலகையைப் பார்த்துப் பதிவு செய்து எமக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தியதை நாம் நேரில் பார்த்தோம்.

இராணுவமே தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துகின்ற தென்பதை அறிந்து கொண்ட நாம் தொலைபேசி அழைப்பை எடுக்கவில்லை. இவ்வாறு இராணுவம் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியமைக்குக் காரணம் நாம் விழிப்பாக இருக்கின்றோமா? என்பதை அறிந்து கொண்டு எம் மீது தாக்குதல் நடத்துவதற்கெனறே கருதுகின்றோம்.

முன்னரும் இரு தடவைகள் சிறிலங்கா இராணுவத்தினரால் எமது அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது தாங்கள் அறிந்த விடயமே. நேற்று அதிகாலையில் நாம் அனைவரும் விழிப்பாக இருந்தமையால் இராணுவத்தினரால் எம் மீது தாக்குதல் நடத்த முடியாமல் போய் விட்டது.

இராணுவத்தினரின் இவ்வாறான தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் எமது அலுவலகத்தில் தங்கி நின்று கல்வி கற்கின்ற பாடசாலை, தொழில் நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட எமக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றது.

எமது அலுவலகத்துடன் சேர்ந்தே யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனுடைய அலுவலகமும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இராணுவத்தினரின் இந்த அத்து மீறல் நடவடிக்கைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஒரு பாராளுமன்ற உறுப்பினரதும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைக்கின்ற எமது நிறுவனத்தின் மீதும் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடாத்துவது யுத்த நிறுத்த மீறல் என்பதையும் இங்கு சுட்டி காட்ட விரும்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடியிருப்பை உறுதி செய்ய விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

அரச காணிகளில் குடியிருப்போர் தமது குடியிருப்பை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்ற ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று உலக வங்கியின் வீடமைப் புனர்வாழ்வுத் திட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

அரச காணிகளில் குடியிருப்போர் தம் குடியிருப்பை உறுதி செய்துகொள்வதற்கு ஏற்ற ஆவணங்கள் இல்லாததால் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டே உலக வங்கியின் வீடமைப்புப் புனர்வாழ்வுத் திட்டத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை அரச காணிகளில் குடியிருப்போர், கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர், உதவி அரச அதிபர் ஆகியோருடாக அனுப்பி வைக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரச காணிகளில் குடியிருப்பதற்கான உறுதிப்படுத்தல் ஆவணங்களை வைத்திருந்து அவற்றைத் தவற விட்டோரும் இத் திட்டத்தில் விண்ணப்பித்து ஆவணங்களைப் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி நகரை நவீன நகராமாக்க திட்டம்

(சாவகச்சேரி)

யாழ். சாவகச்சேரி நகரை நவீன நகரமாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளான நிலையில் காணப்படும் சாவகச்சேரி நகரம் அப்பகுதி வாழ் மக்களது அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வசதிகளைப் கொண்டிருக்கவில்லை.

இதனால் ஏற்பட்டிருக்கும் பின்னடைவுக்ளைக் கவனத்தில் கொண்டே சாவகச்சேரி நகரை நவீன வசதிகள் கொண்ட நகரமாக விருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதற்கான செயற்றிட்டங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் பிரிவினரும், பாராளுமன்ற உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும் இணைந்து ஆலோசனை நடத்தி திட்ட வரைபுகளைத்தயார் படுத்தியுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் கூறினார். (33)

# மனிதக் கழிவுகளை கொட்ட இடத்தை ஒதுக்குமாறு கோரிக்கை

(மந்திகை)

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் [illegible] பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மந்திகை ஆதார வைத்தியசாலையின் மனிதக் கழிவுகளை கொட்டுவதற்கு பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்து சட்ட பூர்வமாக்கும்படி ஆதார வைத்திய நிர்வாக அலுவலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பருத்தித்துறை மந்திகைஆதார வைத்தியசாலையில் நீண்ட காலமாக மனிதக் கழிவுகள் அகற்றப்படாதுள்ளது. இது தொடர்பாக சுகாதாரப் பரிசோதகர் தெரிவிக்கையில்:- கலிகை வீதியையும், யாக்கரை வீதியையும் இணைக்கும் பகுதி சன நடமாட்டம் அற்ற ஒதுக்குப் புறமாக இருப்பதால் இங்கு நான்கு பக்கமும் சுவர்கள் அமைத்து பாதுகாப்பாக அங்கு கழிவுகளை கொட்ட முடியும் ஆனால், சட்டபூர்வமாக இவ்விடம் தெரிவு செய்யப்படவில்லை எனத் தெரிவித்தார்.

எனினும் பருத்தித்துறை சுகாதாரப் பிரிவுபிரதேச சபை தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் ஒன்றிணைந்து கலந்தாலோசித்து மனிதக் கழிவுகளைக் கொட்டுவதற்குரிய இடத்தினைத் தெரிவு செய்யுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (கா)

# இராணுவத்தினரின் தாக்குதல் திட்டமானது எனது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது

## -யாழ். மாவட்ட பா.உ. செ. கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினரான எனது அலுவலகம் அமைந்துள்ள சர்வதேச மாணவர் பேரவைக் கட்டடத்தின் முன்பாக இருந்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டமையானது எனது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன், மக்களுக்கு சேவையாற்ற முடியாத நிலையையும் ஏற்படுத்தியுள்ளது என தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தின் முன்பாக இருந்து நேற்று அதிகாலை இராணுவத்தினர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டமை தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு தெரிவித்துள்ள முறைப்பாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் எனது அலுவலகம் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் கட்டடத்தின் முன் புறமாக உள்ள மதிலுக்குப் பின்னால் பதுங்கியபடி அலுவலக கட்டடத்தினை நோக்கித் தாக்குதல் நடத்தத் தயாரான நிலையில் இருந்துள்ளனர்.

அந்த வேளையில் நாய்கள் உரத்த குரலில் குரைத்த போது அலுவலகத்தில் தங்கியிருந்த இணைப்பாளர், எனது உதவியாளர்கள் மற்றும் மாணவர்கள் அலுவலகத்துள்ளிருந்தபடி முன் புறத்தைப் பார்த்த போது இராணுவத்தினர் துப்பாக்கிகளை மதிலுக்கு மேலாக அலுவலகத்தை நோக்கி நீட்டியபடி பதுங்கி இருந்ததை அவதானித்துள்ளனர்.

இராணுவத்தினரின் இச் செயல் எனது உயிருக்கு அச் சுறுத்தலைப் ஏற்படுத்தியுள்ளதுடன், எனது மக்களுக்கு சேவையாற்ற முடியாத நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மாணவர் பேரவைக் கட்டடத்தில் தங்கி நின்று கல்வி பயிலும், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் சுமூகமாகத் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையும் தோன்றியுள்ளது. மரண பயத்துடன் வாழ வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இராணுவத்தினரின் இச்செயல் ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் என்பதுடன் போர் நிறுத்த மீறலுமாகும் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன் எதிர் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும் என வேண்டுகின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீடு அமைப்பதில் குறைபாடு காணப்படின் பொதுமக்கள் முறைப்பாடு செய்யலாம்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகள் தரம் குறைந்த கட்டடப் பொருட்களைப் பயன்படுத்தி அமைக்கப்படுமாயின் அது பற்றி பயனாளிகள் முறைப்பாடு செய்யலாம் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஸ் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு தொண்டர் நிறுவனங்களும் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளன.

இவ்வாறு தொண்டர் நிறுவனங்களால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகளை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்படும் கட்டடப் பொருட்களின் தரத்தை வீடமைப்பு உதவி பெறும் பயனாளிகள் நேரடியாகக் கண்காணித்து அதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அது பற்றி அரச செயலகத்தில் முறையிடலாம்.

இத்தகைய முறைப்பாடுகள் பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டு குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்படும் வீடுகளை உறுதியான கட்டடப் பொருட்களைக் கொண்டும் சுனாமி வீடமைப்புத் திட்ட அளவுப் பிரமாணங்களுக்கு அமைவாகவும், நிர்மாணிப்பது தொண்டர் நிறுவனங்களின் கடப்பாடு என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (33

# வீதி அகலமாக்கும் நடவடிக்கை யாழ்.இல் உடனடியாக ஆரம்பம்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஆறு பிரதான வீதிகளை அகலமாக்கும் திட்டத்தின் முதற் கட்ட நடவடிக்கைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்படவிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் ஏற்கனவே அகலமாக்கத் திட்டமிடப்பட்ட கண்டி வீதி, பருத்தித்துறை வீதி, காங்கேசன் துறை வீதி, பலாலி வீதி, ஊர்காவற் துறை வீதி, மானிப்பாய்வீதி ஆகிய ஆறு வீதிகளையும் அகலமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்த வீதிகளை முதற் கட்டமாக 15.2 மீற்றருக்கு அகலமாக மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இவ் வீதிகளின் மையத்திலிருந்து பக்கவாட்டாக 7.6 மீற்றர் தூரத்தில் உள்ள வீதியோரக் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக வீதியோர காணிகள் மற்றும் கட்டடங்கள் என்பன வீதி அபிவிருத்தியில் உள் வாங்கப்படவிருப்பதால் அவற்றின் உரிமையாளர்களுடன் பேசி கலந்தாலோசித்து இச் சுவீகரிப்பிற்கான இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இந் நடவடிக்கைகள் பற்றி அதன்தலைவர் யாழ். அரச அதிபர் கணேஸிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். (33)

# யாழ். நகரை முற்றவெளிப் பகுதிக்கு நகர்த்த நடவடிக்கை எடுப்பு

## மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தை முற்றவெளிப் பகுதியை நோக்கி நகர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா கூறியுள்ளார்.

யாழ்.நகரை விரிவாக்கம் செய்வதற்கு போதிய நடவடிக்கைகள் இன்மையால் யாழ். நகரம் நெருக்கடி மிக்கதாகவும், நெரிசல் மிக்கதாகவும் உள்ளது.

இதனால் போக்குவரத்து நகர நிர்வாகம், சுகாதார நிலைமைகள், பொருளாதார நடவடிக்கைகள் என்பன பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன.

இந் நிலைமையால் ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் கவனத்தில் கொண்டே யாழ். நகரை முற்றவெளி பகுதியை நோக்கி நகர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. . இதற்கான நகர விரி வாக்கல் திட்டமிடல் நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஆண் போராளிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளே பெண்கள் அணிக்கும் வழங்கப்பட்டது

## 20ம் ஆண்டு நிறைவில் மகளிர் படையணி

1985 ஆம் ஆண்டு ஆரம்பமான மகளிர் படையணி 1990 ஆம் ஆண்டு வரையான ஐந்து வருட காலப்பகுதிக்குள் பாரிய வளர்ச்சியடைந்து எதிரியை தனித்து நின்று தாக்கியழிக்குமளவிற்கு உருப்பெற்று விட்டது.

1985 ஆம் ஆண்டு காலத்திலும், அதற்கு முன்னரும் பெண்கள் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையில், விடுதலைப் போராட்டத்தில் இணையப் பெண்கள் முன் வந்த போதும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் அக்காலத்தில் பெண்கள் இணைவதென்பது இலகுவானதொன்றாக இருக்கவில்லை.

ஆனால் தமக்கு எதிரான வன்முறைகளை எதிர்ப்பதற்காக போராடியே தீர வேண்டும் என்ற நிலையிலிருந்த பெண்கள் அக் காலத்தில் எவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார்கள் என்பதை மகளிர் படையணியின் மூத்த போராளியும் முதலாவது அணியில் - தலைவர் அவர்கள் பெண்களுக்கென முதன் முதல் ஆயுதப் பயிற்சியை ஆரம்பித்து வைத்த போது ஆயுதத்தை தலைவரிடமிருந்து முதன் முதலாக பெற்ற பெண் போராளியுமான தீபா


(தீபா)

இவ்வாறு கூறுகிறார்.

"1983 காலப்பகுதியில் தென் பகுதியிலிருந்து வன்முறையால் இடம்பெயர்ந்து வந்த இளம் பெண்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அவர்கள் சிங்களவர்களால் எவ்வளவு கொடுமைகளை அனுபவித்தார்கள் என்பதை எமக்குக் கூறினார்கள். அந்த நிலைகள் எனது மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக நான் இவ் ஆக்கிரமிப்பாளருக்கெதிராக போராட வேண்டுமென்ற முடிவோடு 1984 ஆம் ஆண்டு போராட்டத்தில் இணைவதற்காக முன் வந்தேன் அப்போது இங்கிருந்து இந்தியாவிற்கு போய்ச் சேரும் வரை சொல்ல முடியாத பெரும் துன்பங்களுக்குப் பின்பே தேசியத் தலைவரிடம் போய்ச் சேர்ந்தோம். அதற்குப் பின்பும் நாம் உடனடியாக போராளிகளாக சேர்த்துக் கொள்ளப்படவில்லை. 1985 ஆம் ஆண்டு ஆயுதப் பயிற்சியைப்பெறும் வரைக்கும் எமக்கு மருத்துவம், முதலுதவி போன்ற பயிற்சிகளும் சமூகப் பணிகள் பற்றிய பயிற்சிகளுமே வழங்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டு பயிற்சிப் பாசறைக்குச் சென்ற பின்பும் கூட பெண்கள் கடினமான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவர்களா? என்ற நிலையே இருந்தது.

ஆனால் நாம் ஆண்களுக்குச் சரி நிகரான வேலைகளை அங்கு செய்தோம். அனைத்து செயற்பாடுகளிலும், பெண்களால் எதையும் செய்ய முடியுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தினோம். அதாவது அன்னிய மண், புதிய இடம், புதிய மக்கள் ஆகிய எல்லாவற்றையும் உடைத்தெறிந்து எமது கடினமான பயிற்சியை நாங்கள் மேற்கொண்டு மிகவும் திடமாக செயற்பட்டோம்.

இதற்கு முழுமன உறுதியையும், நம்பிக்கையையும் எமக்கு ஊட்டியவர் எமது தேசியத் தலைவர் தான் அவ்வாறு பயிற்சிகளை முடித்த பின் கூட தமிழீழ மண்ணில் வந்தும் எம்மால் உறுதியாகச் செயற்பட முடியுமா என்ற சந்தேகமும் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் எமது தாயகத்திலே லெப். கேணல் விக்ரர் அண்ணாவின் தலைமையில் மிகவும்,திடமாக பல சண்டைகளில் ஈடுபட்டோம். எமது பயிற்சிப் பாசறையில் ஆண் போராளிகள் தான் எமக்கு பயிற்சி வழங்கினார்கள். 1987 ஆம் ஆண்டு எமது தாயகத்தில் முதன் முதலாகக் கிளாலிப் பிரதேசத்தில் பெண்கள் பயிற்சி முகாமை உருவாக்கி எமக்கு இந்தியாவில் வழங்கப்பட்ட பயிற்சிகளைப் போன்ற பயிற்சிகளை இங்கு இணைந்த பெண்களுக்கு வழங்கினோம்." எனக் கூறினார்.

இந்தியாவில் நடைபெற்ற இப் பயிற்சியானது விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவினருக்கு நடைபெற்ற பரிசோதனையாகவே அமைந்ததெனலாம். ஏனெனில் ஒரு வருடம் நீண்ட கால கடுமையான பயிற்சியை மகளிர் அணி முடித்ததென்றால் அது இம் முதலாவது அணி மட்டுமென்றே கூறமுடியும்.

இந்த அணிப் போராளிகளால் எவற்றை செய்ய முடியுமோ சாதிக்க முடியுமோ அவையே இனிவரும் பெண்களால் செய்ய முடியுமென கணிக்கக்கூடிய நிலையும் எது முடியாதிருக்கின்றதோ அது இவர்களால் முடியாதென்ற நிலையுமே அன்றிருந்தது. ஆகவே பெண்கள் இப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமானால் தேச விடுதலையில் பெண்களின் பங்கும் இணைக்கப்பட வேண்டுமானால் எந்தவொரு கடினமான பயிற்சியினையும் தாம் மனம் தளராது செய்ய வேண்டுமென்ற திடமான உறுதி அந்த முதலாவது பிரிவில் பயிற்சி பெற்ற 91 பெண் போராளிகளின் மத்தியிலும், வேரூன்றியிருந்தது.

இதே வேளை மகளிர் அணியின் முதலாவது அணியில் பயிற்சி பெற்ற போராளி தனுஜா தான் போராட்டத்தில் இணைந்த போது இருந்த சூழலைக் கூறினார்.

"மன்னார்ப் பகுதியில் நாங்கள் வாழ்ந்த காலத்தில் தான் போராட்டத்தில் இணைந்தேன். அன்று எனது சகோதரன் போராளியாக இருந்த காரணத்தினால் போராளிகளின் தொடர்பு எனக்கு ஓரளவு கிடைத்தது. அன்று நாட்டில் நடந்த கொடுமைகளால் போராட வேண்டுமென்ற நிலையிலிருந்த நான் விடுதலைப் புலிகளுடன் இணைவதற்காகச் சென்ற போது பெண்களை இயக்கத்தில் இணைப்பதில்லை என என்னை பல முறை திருப்பி அனுப்பி விட்டார்கள். பின் பல்கலைக்கழகத்திலிருந்தும் வேறு சில இடங்களிலிருந்தும் பெண்கள் இணைந்ததை அறிந்த நான் அவற்றை சுட்டிக்காட்டி என்னையும் இணைக்குமாறு பலதடவைகள் கேட்ட பின்பே என்னை இணைத்துக் கொண்டார்கள்" என்றார்.

அன்று பெண்கள் அமைப்பில் இணைய முன் வந்த போதும் அவர்கள் தேசத்திற்கு பணியாற்ற விரும்பினால் சமூகத்தில் இருந்த படியே சமூகப் பணிகளைச் செய்ய வேண்டிய நிலையும் இருந்தது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் பெண்கள் இணைக்கப்பட்டு சுதந்திரப் பறவைகள் அணி என பெயரிடப்பட்டு சமூகத்தில் இருந்தபடியே விடுதலைப்புலிகளின் குறிக்கோள்களில் ஒன்றான சமூக விழிப்புணர்வூட்டும்


(தனுஜா)

பணியில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அன்று யாழ். மாவட்ட பொறுப்பாளராகவிருந்த லெப்கேணல் திலீபனின் தலைமையில் இவ்வணி செயற்பட்டு பல பணிகளை ஆற்றியது. மக்கள் மத்தியில் விடுதலைக் கருத்துக்களை விதைப்பதில் சுதந்திரப் பறவைகள் அணியின் பங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகவே இருந்தது.

அந்த சுதந்திரப் பறவைகள் அணியில் செயற்பட்டு தனது விடா முயற்சியின் பின் போராளியான பூங்கா தான் போராட்டத்தில் இணைவதற்கே ஒரு போராட்டத்தை நடத்தியதாகக் கூறினார்.

" அன்று பெண்களும் போராட வேண்டும் என்ற நிலை உருவானதால் நானும் போராட வேண்டுமென்று புறப்பட்டேன். ஆனால் அந்தக் காலத்தில் போராட்டத்தில் பல அமைப்புக்கள் செயற்பட்டன. ஆனால் அன்று விடுதலைப் புலிப் போராளிகளை இனங்காண முடியாது. அந்த சூழலில் நான் திலீபண்ணாவை இனங்


(பூங்கா)

கண்டு போராட்டத்தில் இணைய வேண்டுமென்று கேட்டேன். அவர் எமது இயக்கத்தில் பெண்கள் இல்லை,. நீங்கள் எவ்வாறு வேலை செய்வீர்கள் என்றெல்லாம் கூறி தட்டிக்கழித்தார். நானும் விடாமுயற்சியுடன் அவர்களை கேட்டுக் கொண்டேயிருந்தேன். ஒரு நாள் என்னை ஓரிடத்திற்கு வரச்சொன்னார். நான் அங்கு சென்றபோது வேறு சில பெண்களும் வந்திருந்தார்கள். அங்கு எமக்கு இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கூறி எமது இயக்கத்தில் பெண்கள் இல்லை. நீங்கள் பணி செய்வதானால் சமூகத்திலிருந்தே வேலை செய்யவேண்டுமென்றும் கூறினார். நாங்களும் அதை ஏற்றுக்கொண்டு செயற்பட ஆரம்பித்தோம். எமக்கெனத் தரப்பட்ட பணிகளை இராணுவத்தினரின் மிகமோசமான கெடுபிடிகளுக்கு


(தமிழவள்)

மத்தியிலே செய்தோம். பின்பு பலாலி, கோட்டை போன்ற இராணுவமுகாம்களில் காவலில் நின்ற போராளிகளுக்கு முதலுதவிகளைச் செய்து வந்தோம். இவ்வாறிருந்த காலத்தில் எங்களை பயிற்சிக்கு அனுப்புமாறு கேட்டோம். அன்று பொறுப்பாயிருந்த கிட்டு அண்ணா கூறினார், நீங்கள் சமூகத்தை அரசியல் பணி மூலம் போராட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டுமென்று. சில காலத்திற்கு பின்புதான் நாங்கள் பயிற்சிக்கு போனோம்" எனக் கூறினார்.

இதே வேளை சுதந்திரப்பறவைகள் அமைப்பிலிருந்து செயற்பட்டு பின் போராளியான தமிழவள் தான் போராளியான அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொள்கின்றார்.

"சுதந்திரப் பறவைகள் அணியில் பணியாற்றிய முதலாவது அணியினர் பயிற்சிக்கு சென்றபின் அவர்களது பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டிய பொறுப்பே எமக்கு முதலில் வழங்கப்பட்டது. ஆனால் எமக்கு பயிற்சிபெற வேண்டுமென்ற எண்ணம்தான் மனதில் இருந்தது ஆனால் பழகுகின்ற போராளிகளையெல்லாம் எம்மை இயக்கத்திற்கு இணைக்குமாறு கேட்டு வந்தோம். ஆனாலும் அந்த நேரம் முற்றுமுழுதாக இயக்கத்தில் இணைய முடியவில்லை அதன் பின்பு நான் விடுதலை அமைப்பிற்கு வேலை செய்வதால் எனக்கும் எனது குடும்பத்திற்கும் ஆபத்து ஏற்படப்போகிறது என்ற நிலை உருவாக எனது அம்மா கூறினா நீ இயக்கத்திற்கு போக நினைத்தால் போ ஆனால் இங்கிருந்து எமக்கு முன்பாக உனக்கு எதுவும் நடக்கக் கூடாது என்று அதற்குபிறகு எனது உறவினர் ஒருவரை மாற்று இயக்கம் கொண்டு போய் எங்களை கேட்டு அடித்து துன்புறுத் தியதன் பின் நான் இயக்கத்தில் இணைக்கப்பட்டேன் அதுவும் காங்கேசன் துறையிலிருந்து வல்வெட்டித்துறைக்கு எனது அம்மம்மாதான் கூட்டிச் சென்று இயக்கத்தில் இணைத்தார் என்றார்.

இதே வேளை சுதந்திரப்பறவைகள் அணி செயற்பட்ட அதே காலத்தில் இயங்கிய மாணவர் அமைப் பில் அன்று செயற்பட்டு பின் போராளியாகிய தாரணி தனது அனுபவத்தைக் கூறினார்.

போராட்டத்தின் தேவைகளையோ போராட்டத்தில் சேர வேண்டும் என்ற உணர்வையோ எங்களுக்கு திணிக்கப்பட்டதொன்றல்ல. ஏனென்றால் அன்றைய தேவை ஏதோ ஒருவகையில் போராட வேண்டுமென்ற நிலையை உருவாகியிருந்தது. எங்களுக்கென்ற பிரதேசத்தில் தான் எமக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்பதை சிறுவயதிலேயே நான் உணர்ந்திருந்தேன். நாங்கள் படித்துக்கொண்டிருந்த காலம். அப்போது மறுமலர்ச்சி கழகத்தால் 'மண்சுமந்த மேனியர்' என்ற நாடகம் ஒன்றைப் போட்டார்கள். அது பெரியளவில் மாணவர்கள் மட்டத்தில் மட்டுமல்லாமல் வயதானவர்கள் மட்டம் வரை போராட்டம் முக்கியமானதென்பதை உணரவைத்தது. அத்தோடு 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பில் அனைத்து பாடசாலைகளிலும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர் இதில் பெருந்தொகையானோர் அங்கத்தவர்களாக இருந்தனர். இதனை அன்று மேஜர் முரளி அண்ணா பொறுப்பாக நின்று வழி நடத்தி வந்தார். நாங்கள் அதனூடாக போராட்டத்தில் இணையலாம் என எண்ணினோம் ஆனால் அதிலே எங்களுக்கு தரப்பட்ட வேலை வெடிபொருட்களை தயாரிப்பதற்காக அலுமினியப் பாத்திரங்கள், சைக்கிள் போள்ஸ் போன்றவற்றை சேகரிக்க வேண்டியிருந்தது. அந்த வேலைகளையே நாங்கள் பெருமையாக நினைத்தோம் ஏனெனில் போராட்டத்திற்கு நாங்களும் பங்களிப்பு செய்கின்றோம் என்ற உணர்வு ஏற்பட்டது. அன்று நடந்த மறியல் போராட்டங்களில் மிக முனைப்பாக நின்று போராடியதும் இந்த மாணவர் அமைப்புத்தான். 1987 இல் தலைவரை இந்தியாவில் தடுத்து வைத்ததற்கான எதிர்ப்பு மறியல் போராட்டத்திற்கான தயார்படுத்தலுக்காக திலீபன் அண்ணாவால் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் யாழ்.கைலாசபதி மண்டபத்தையும் நிறைத்து வெளியிலும் மாணவர்கள் நிற்கும் அளவுக்கு ஆயிரக்கணக்கான மாணவர் அமைப்பு உறுப்பினர்கள் யாழ். மாவட்டத்தில் மட்டுமிருந்து வந்திருந்தனர். அவர்கள் எல்லோரும் உயர் தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் தான் இதைவிட மாணவர் அமைப்பில் இருப்பதற்கு நிறைய ஒழுக்க விதிகள் இருந்தன. எமது வீடுகளிலும் கூட ஏனைய செயற்பாட்டுக்குழுகளுக்கு போக அனுமதிக்கமாட்டார்கள் ஆனால் மாணவர் அமைப்பென்றால் அனுமதிப்பார்கள். ஏனென்றால் அங்கு ஒழுக்கம் பேணப்படும் என்பதற்காக. இதற்கிடையில் திலீபன் அண்ணா உண்


(தாரணி)

ணாவிரதமிருந்த காலத்திலும் மாணவர் அமைப்பு முழுப்பங்களிப்பு வழங்கியிருந்தது. இவ்வாறு மாணவர் அமைப்பிலிருந்தே போராடுவது போன்ற உணர்வில் செயற்பட்டு வந்தோம்.

அதன் பிறகு நாங்கள் போராட்டத்தில் இணைவதற்காக பலமுறை முயற்சிசெய்து பின் ஒருவாறாக சேர்ந்து கொண்டோம். எங்களை வல்வெட்டித்துறையிலிருந்து படகில் ஏற்றப்படவுள்ள வேளையில் கூட வட மராட்சி பொறுப்பாளரும் இன்னொருவரும் வந்து எங்களை வீட்டுக்கு திரும்பிச் செல்லுமாறும் நீங்கள் இயக்கத்தில் செயற்படுவது மிகவும் கஸ்ரம் என்றும் நீங்கள் வீட்டுக்கு போவதானால் உங்களை வீட்டில் நாங்களே பாதுகாப்பாக கொண்டு போய் விடுவ தாகவும் கூறியினார்கள். நாங்கள் விடாப் பிடியா கவே இயக்கத்தில் இணையப் போகின் றோ மென்று கூறினோம்.

**இ. சசிக்குமார்**

பின்பு அங்கு மூன்று நாட் கள் தங்கியிருந்து பின் அங்கிருந்து படகேறி னோம் அங்கிருந்து முல்லைத்தீவுக்குச் சென்று தொடர்பில்லாததால் கடற் கரைவாடி யில் தங்கவைக்கப்பட்டோம் அங்கும் மூத்த போரா ளிகள் எம்மை

(8ஆம் பக்கம் பார்க்க)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

**உலகில்** வேகங்கள் மாறிவரும் நிலையில் தென்கொரியாவில் நடைபெற்ற மதங்களுக்கிடையிலான சமாதான விளையாட்டுப் போட்டியில் 400,800 மீற்றர் மெய்வன்மைப் போட்டியில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த சகாயரட்ணராஜா நிரஞ்சன் தங்கப் பதக்கம் வென்று தமிழர்களுக்கும் தமிழர் தேசத்துக்கும், பெருமை சேர்த்துள்ளார்.

தென்கொரியாவின் அசான் மாநிலத்தில் கடந்த மாதம் 23 ஆம் திகதிநடைபெற்ற இப்போட்டியில் ரஷ்யா, கொரியா,மலேசியா, தாய்வான், அல்பேனியா,மொங்கோலியா, பிலிப்பைன்ஸ்,எஸ்தோனியா, இந்தியா, இலங்கை, இஸ்ரேல் போன்ற நாடுகளின் வீரர்களை வீழ்த்தி இந்த அரிய சாதனையை ஏற்படுத்தினார்.

மேற்படி நாடுகளை ஒப்பிடும்போது இலங்கையைப் பார்க்கிலும் விளையாட்டில் வல்லரசுகளாகவே திகழ்கின்றன.

அந்த வகையில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த வீரர்களின் சாதனை பெருமைக்குரியன. இந்த நிலை



பயிற்சியாளர் முகுந்தனுடன் நிரஞ்சன்

மாகாணமட்டப் போட்டியில் வெற்றிபெற்று அகில இலங்கை ரீதியான போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இதிலும் இடம் எதுவும் கிடைக்கவில்லை. இப்படியாகத் தொடர்ந்தும் தோல்விகளைச் சந்தித்த நான் எனது பயிற்சியாளரின் துணையுடன் கடுமையான பயிற்சியை மேற்கொண்டேன். இதன் பலனாக 2004 ஆம்ஆண்டு நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியில் 400,800 மீற்றர் போட்டியில் முதலிடத்தையும்,400 மீற்றர் தடை ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று சம்பியனாகி நம்பிக்கையை வளர்த்துக்கொண்டேன்.

அதனைத் தொடர்ந்து கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் கலந்துகொண்டேன். ஆனால் இடம் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சிறந்த பயிற்சியாளர் ஒருவர் கிடைத்தார். இதனால் எனக்கு நிறைய அறிவுரைகள் கிடைத்தது. ஒன்றில் முழுமையடைய வேண்டுமெனில் அதனையே இலக்காகக் கொள்ள வேண்டும். அதுவே வெற்றியின் ரகசியமாகவும் அமைந்தது.

***பயிற்சியாளரின் பணி எந்தளவிற்கு உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது?**

முற்று முழுதாக எனக்காக அவர் தன்னை அர்ப்பணிக்கின்றார் என்று தான் சொல்வேன். குறிப்பாக போட்டி ஒன்று நாளை என்றால் முன்னர் இண்டு, மூன்று நாட்களே பயிற்சியில் ஈடுபடுவேன். அவர் எனக்கு பயிற்சியாளர் ஆனதும் தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். இதுவும் எனது படிமுறை வளர்ச்சிக்கு முக்கிய காரணம்.

***சாதனை மிகு தென்கொரிய பயணம் மற்றும் அனுபவம் பற்றி கூறுகையில்;**

வெளிநாட்டு பயணம் என்பதே ஒரு புதுவித அனுபவம். விமான நிலையம் புதிது. விமானப் பயணம் புதிது. அங்குள்ள நடைமுறைகள் புதிது. ஆனால் ஏனைய வீரர்கள் மேற்கொள்ளும் பதிவு முறைகளை உடன் அறிந்து கொள்ளும் ஆற்றல் என்னிடம் இருந்ததால் பின்னர் அவை எனக்கு இலகுவாக அமைந்துவிட்டது.

யூலை 23 ஆம் திகதி தென் கொரியா சென்றடைந்தோம். அங்கு பயிறசிக்கான அனைத்து

(1.58.12 வினாடி) நேரப் பெறுதியாக இருந்தது. இது எனது தெரிவுப் போட்டியில் கிடைத்த நேரப்பெறுதியை விட கூடவாகவே காணப்பட்டது. இது எனது அனுபவம் இல்லாத பிழையாகவே அமைந்துவிட்டது என வருத்தப்பட்டேன்.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் தவறுகளை திருத்தி 400 மீற்றரில் கலந்து கொண்டேன். தங்கப் பதக்கம் எனது வசமானது. திறமை இருந்தும் பயம், பதற்றம் என்பன தோல்விகளுக்கு காரணமாக அமைகிறது என்பதை முன்கூட்டியே அறிந்திருந்ததால் தற்போது அதில் இருந்து நிறையவே கற்றுக்கொண்டுவிட்டேன். இதுவும் தென்கொரிய வெற்றிக்குக் காரணம் என்கிறார்.

அத்துடன் எனது வெளிநாட்டு பயணத்திற்கு நிதியுதவி வழங்கிய தமிழீழ விளையாட்டுத் துறையைப் பெருமையாகக் கூறும் நிரஞ்சன் தனக்கு எந்த உதவியையும் செய்வதற்கும் பக்கபலமாக இருப்போம் என உறுதியளிக்கப் பட்டுள்ளதாகவும் கூறுகின்றார்.

அத்துடன் தனக்கு நிதியுதவி அளித்த ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் தனது நன்றியைப் பெருமையுடன் கூறுகின்றார்.

இவை அனைத்துக்கும் மேலாக தான் அங்கம் வகிக்கும் புதுக்குடியிருப்பு சுப்பராங் விளையாட்டுக்கழகத்துக்கு என்றென்றும் நன்றியுடையவராகவும், தான் ஒரு விளையாட்டு வீரனாக அறியப்படாத காலத்தில் எனக்கான அனைத்து உதவிகளையும் குறிப்பாக காலணி (Baits)முதல் பயணச் செலவுகள் வரை அதன் நிர்வாகி ஜான் அவர்



களே செய்து வருகின்றார். அவர் எனது வளர்ச்சிப்படியில் இன்றுவரை அனுசரணையாளராகவே உள்ளார் எனப் பெருமைப்படுகிறார். அத்துடன் தான் கல்வி

**தென்கொரியாவில் கடந்த ஓகஸ்ட் 30, 31ஆம் திகதிகளில் நடைபெற்ற 22 வயதுக்குட்பட்டோருக்கான தடகளப் போட்டியில் 400 மீற்றர் (48.46 வினாடி) 800 மீற்றர் (1.56.32 வினாடி) போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி உயர்தர மாணவன் சகாயரட்ணராஜா நிரஞ்சனுட னான நேர்காணல்;**

# எதிர்காலம் ஒளிமயமானது...

யில் வீரரின் அபார முயற்சி மற்றும் மனோதிடம், ஆரம்ப கட்ட வளர்ச்சிப்பாதை மற்றும் பக்கபலமாக உள்ளவர்கள் யார் என்பது பற்றி எல்லாம் அறிய அவரை அணுகினோம்.தொடர் தோல்விகளுக்கு மத்தியிலும் எனக்கிருந்த நம்பிக்கையும் பெற்றோரின் முழு ஆதரவும், பயிற்சியாளரின் நிறைந்த ஒத்துழைப்புமே எனது வளர்ச்சி படிக்கற்கள் எனக் கூறும் நிரஞ்சன் தொடர்ந்து பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

ஆரம்பத்தில் விளையாட்டை ஒரு அங்கமாக கற்றாலும் சாதிக்க வேண்டும், மேலும் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் இருக்கவில்லை. எனது பணி மாவட்டத்துக்குள்ளேயே முடங்கியிருந்தது. இந்த நிலையில் பயிற்சியாளர் முகுந்தன்அவர்களை அணுகிய பின்னர் சாதனைகள் என்பது இயலாதது ஒன்று அல்ல என்பதை உணர்ந்துகொண்டேன்.

எனது முதல் இலக்காக மாகாணமட்டப் போட்டி இருந்தது. மாவட்ட போட்டி பெரிதாக தெரியவில்லை. இதன் மூலம் 2002 ஆம் ஆண்டு எனது இலக்கை அடைந்தேன். அதாவது மாகாணமட்டப் போட்டியில் 800 மீற்றரில் முதலாம் இடத்தையும், 400 மீற்றர் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றேன்.

அதே ஆண்டு அகில இலங்கை ரீதியிலான போட்டியில் க.பொ.த.சாதாரணதர பரீட்சை எழுதிக்கொண்டிருந்த காலம். அப்போதும் பயிற்சி எடுப்பதில் நெருக்கடியைச் சந்தித்தேன். இறுதி சுற்றுவரை முன்னேறினேன். ஆனால் இடம் எதுவும் கிடைக்கவில்லை.

பின்னர் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற 400 மீற்றரில் சிறந்தநேரப் பெறுதியைப்பெற்றேன்.(50.08 வினாடி) இது எனக்கு மேலும் நம்பிக்கையைத் தந்தது. இந்த நிலையில் எனது தெரிவுக் குரிய போட்டியாக 400 மீற்றரே என்பதை உறுதி செய்தேன் என்கிறார் நிரஞ்சன். பின்னர் 2004 ஆம் ஆண்டு தேசிய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் 400 மீற்றரில் வெள்ளிப்பதக்கமும், 800 மீற்றரில் வெண்கலப்பதக்கமும் கிடைத்தது.

இது என்னை தங்கப் பதக்கம் பெறும் முனைப்பை உருவாக்கியது. இதற்காக பயிற்சிகளை விரிவுபடுத்தினேன். இதன் பலனாக கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் 400 மீற்றரில் தங்கப்பதக்கம் வென்றேன். (48.95 வினாடி) இதில் நான் முன்னேற்றம் கண்டு வருவது தெளிவானது.

குறிப்பாக கடந்த நான்கு வருடத்திலேயே எனது பயிற்சியை இறுக்கமாகப்பெற்று இந்த நிலைக்கு வந்தேன் என்றால் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

*** சுவட்டு நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்ததன் காரணம்?**

எனக்கு அனைத்து விளையாட்டுக்களிலும் ஆர்வம் இருந்தபோதும் தேர்ந்தெடுத்தது 400,800 மீற்றர்களே. ஒருவரால் எத்துறையில் சாதிக்க முடியுமோ அதையே பின்பற்ற வேண்டும். தவறினால் பின்னடைவு தான் எனும் பயிற்சியாளரின் அறிவுரையைப் பின்பற்றினேன் என்கிறார் நிரஞ்சன். நான் பயிற்சியை 15 வயது முதல் ஆரம்பித்துவிட்டேன். ஆனாலும் கடந்த நான்கு வருடத்தில் தான் எனக்கு

வசதிகளும் செய்யப்பட்டிருந்தது. மூன்று மணித்தியாலம் பயிற்சி மேற்கொள்ளும் வாய்ப்பும்கிடைத்தது.

***தென்கொரியாவில் ஏனைய போட்டியாளர்களுடன் ஏற்பட்ட சவால் பற்றி கூறுகையில்;**

அனைத்து நாட்டு வீரர்களும் ஒரே இடத்திலேயே தங்கினோம். இதனால் அவர்களுடன் பயிற்சியில் ஈடுபடும் அரியவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த அருமையான வாய்ப்பு அவர்களில் ஒருவராய் என்னை மாற்றியதுடன் பயம் என்பது அறவே அற்றுப்போய்விட்டது. அத்துடன் ஏனைய வீரர்களின் நேரப்பெறுதிகளும் எங்களுக்கு வழங்கப்பட்டது. எனது நேரப் பெறுதியும், அவர்களின் நேரப் பெறுதியும் கிட்டக்கிட்டவாக இருந்தது. எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளித்தது.

அத்துடன் சிறிலங்காவில் இருந்து மாத்திரம் சுவட்டு நிகழ்வுக்கு 60 தொடக்கம் 70 பேர் வரை சென்றிருந்ததால் அதுவும் ஒரு பலமாக அமைந்தது.

***அகில இலங்கை ரீதியான போட்டிகளில் நீங்கள் எதிர்நோக்கிய சிக்கல்கள், சவால்கள் பற்றி;**

எப்படியாவது ஒரு பதக்கம்(Medal) பெற்றால் போதும். அதுவே பெரிய ஒரு சாதனை என்பது போல்தான் தெரிந்தது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் 800 மீற்றர் தெரிவுப் போட்டியில் கலந்து கொண்டு (1.58.11) சிறப்பான நேரப் பெறுதியைப் பெற்றேன். ஆனால் நான் விட்ட தவறால் இறுதிச்சுற்றில் மூன்றாவது இடமே கிடைத்தது/ இதில் முதலாவது இடம் பெற்றவருக்கு

கற்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர் களையும் பாராட்டத் தவறவில்லை.

**விளையாட்டில் ஈடுபடுவதால் உங்களது கல்வி பாதிக்கப்படுகிறதா?**

நிச்சயமாக இல்லை. நான் முதல் தடவையாக அகில இலங்கை ரீதியாக பங்குபற்றும் போது க.பொ.த,சாதாரணதரம் கற்றுக்கொண்டிருந்தேன். பரீட்சைக்கு இரண்டு மாதமே

**இ. சியான்**

எஞ்சியிருந்தது. ஆனால் எனது பெறுபேறு 6A,3B,C, ஆக அமைந்தது. தற்போது உயர்தரத்தில் கணிதத்துறையை கற்றுக்கொண்டிருக்கிறேன். எனவே கல்வியில் ஒரு அங்கமாகவே விளையாட்டையும் கற்று வருவதால் எந்தவித பிரச்சினையும் எனக்கில்லை.

சமூகத்தில் அப்படியான ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் அது பொய் என்றுதான் சொல்ல வேண்டும்.

*** உங்களது எதிர்கால இலக்காக எதனை நிர்ணயித்துள்ளீர்கள்.**

எனது பாடசாலை வாழ்க்கை இன்னும் இரண்டு வருடம்தான் . தற்போது 22 வயதுப் பிரிவிலேயே என்னால் மேற்படி சாதனைகளை ஈட்ட முடிந்தது. இந்த நிலையில் இருந்து அகில இலங்கை ரீதியில் நடைபெறும் திறந்த போட்டி (open meta) களில் கலந்து கொண்டு இலங்கையில் முதல்நிலை வீரராக

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே நாளில் இரு பொதுத் தேர்தல்களையும் நடாத்த சனாதிபதி சந்திரிகா திட்டம்

## தேர்தல் ஆணையாளரிடம் ஆலோசனை

(கொழும்பு)

இவ்வாண்டு இறுதிக்குள் சனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டால் சனாதிபதித்தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் ஆகியவற்றை ஒரேநாளில் நடத்தும் வகையில் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க பாராளுமன்றத்தைக் கலைத்துவிட திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் ஒரே நாளில் நடத்த முடியுமா என்பது பற்றி சனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் ஆணையாளரிடம் வினவியிருப்பதாகத் தெரியவருகிறது.

இவ்விரு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்த முடியுமா எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் வினவியபோது: இவ்விரு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டியேற்பட்டால் அதனை தேர்தல் செயலாளர் காரியாலயத்தினால் நிறைவேற்ற முடியும் என்றார். அதற்கென நிதி ஒதுக்கீட்டுப் பிரச்சினையும் ஏழாது என்றும் அவர் கூறினார்.

அடுத்த சனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதி பற்றிய தனது கருத்தை தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் 18 ஆம் திகதியே அறிவிக்கத் திட்டமிட்டிருந்தாரென உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் சனாதிபதியின் கடிதம் மற்றும் சோபிததேரரின் மனு என்பவற்றிக்கு உயர்நீதிமன்றம் தனது கருத்தைத் தெரிவிக்கும் வரை மௌனம் சாதிக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.சோபித தேரரின் மனுவை தள்ளுபடி செய்து 2006 இல் தேர்தல் நடத்த உத்தர விடுமாறு கோரி சிறிலங்கா சுதந்திரக்கட்சி தாக்கல் செய்த மனு எதிர்வரும் 22 ஆம் திகதி ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.பகிரங்க பதவிப்பிரமாணம் மற்றும் இரகசிய பதவிப்பிரமாணம் இவையிரண்டும் பிரதம நதியரசர் முன்னிலையிலேயே இடம் பெற்றுள்ளதால் ஐந்து நீதியரசர்கள் கொண்ட இந்தக் குழுவில் பிரதம நீதியரசர் அங்கம் வகிக்கக் கூடாதென அடிப்படை எதிர்பார்ப்பொன்றை முன்வைக்க மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தீர்மானித்துள்ளது.

இன்னும் இரு வாரங்களுக்குள் உயர்நீதிமன்றத்தின் கருத்து அறிவிக்கப்படும் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சமாதான முயற்சி, யுத்தநிறுத்த உடன்படிக்கை நிச்சயமற்ற நிலையை அடைந்துள்ளது

## புத்தளத்தில் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சமாதான முயற்சி மற்றும் யுத்த நிறுத்த உடன்படிக்கை என்பன தற்போது நிச்சயமற்ற ஒரு நிலையை அடைந்துள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவிததார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்த பின்னர் மக்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

இவ்வாண்டு இறுதிக்குள் சனாதிபதித்தேர்தலை நடத்தி மக்கள் தங்களுக்குத் தேவையான ஒரு சனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

## ஆண்போரளிகளுக்கு...

வீட்டுக்குச் செல்லுமாறு கூறினர். நாம் மனவுறுதியோடு போராட வேண்டுமென்ற ஒரே நோக்கோடு உறுதியாக இருந்ததனால் இயக்கத்தில் இணைக்கப்பட்டோம்.

எனவே விடுதலைப்புலிகள் அமைப்பில் பெண்கள் இணைக்கப்பட்டதென்பது ஆக்கிரமிப்பாளர்களுக்கு சார்பான ஊடகங்களோ பேச்சாளர்களோ குறிப்பிடுவது போல ஆளணிப்பற்றாக்குறையிலோ அல்லது கடுமையான கருத்தூட்டலின் பின்போ இணைக்கப்படவில்லை. இனவாதிகளின் அடாவடித்தனத்திற்கிலக்கான பெண்கள் போராடமுற்பட்ட வேளையிலேயே இணைக்கப்பட்டனர், இணைக்கப்பட்டு வருகின்றனர். இதைத் தவறாக விடுதலைப்புலிகள் கட்டாயப்படுத்தியே பெண்களை போரில் இணைப்பதாக சிலர் கருதவதை நினைக்க எனக்கு வியப்பாகவே இருக்கின்றது. ஏனெனில் நாங்கள் அன்று போராட்டத்தில் இணைவதற்கு எந்தளவு சிரமப்பட்டோம் என்பதை இவர்க் அறியவில்லை போலுள்ளது என்றார். (தொடரும்)


# கிளிநொச்சி வர்த்தகர் சங்கம் தரும் விசேட அறிவித்தல்



அருள்மிகு கிளிநொச்சி கந்தன் ஆலய தேர் உற்சவம் எதிர்வரும் 18.08.2005 வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதால் அனைத்து வர்த்தகநிலையங்களும் வருடாந்த வழமை போல் பூட்டி இருக்கும் என வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருவதுடன் எமது சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களை ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(சி.12554)

வர்த்தகர் சங்கம்,
கிளிநொச்சி.


## உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

**நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி**
**ஆஅவ கடன் இல:- 2048-சிறீ (எஸ்எவ்)**

# கேள்வி அறிவித்தல் இல-49

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1 போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கபபட்டுள்ளது.

2 இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

*அட்டவணை*

| தொ இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப்பிணைப பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/CAARP/IR/02 | மன்னார் 11 வது மைல் கட்டுக்கரைக்குளம் புனர் நிர்மாணம். | M5 நீர்ப்பாசனம் | 159,000/= |

3 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I) நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

II) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD டுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) விளங்க வேண்டும்.

III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுபத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV) "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V) ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4 ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434. /பக்ஸ் :026-2227401. இணையதள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk )

6 கேள்வி ஆவணங்களை **16.08.2005** இலிருந்து **29.08.2005** வரை காலை **9.30** ,லிருந்து மாலை **3.00மணி** வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு **ரூபா 5,000/-** ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8 பொறிவைத்த கேள்விகள் யாவும் **தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை** என்ற விலாசமிடப்பட்டு, **05.09.2005** காலை **11.30** மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9 முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் **25.08.2005** ஆம் திகதி அன்று காலை **11.30** க்கு நடைபெறும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

*நா. புகேந்திரன்,*
*பதில் தலைவர், கேள்விச் சபை,*
*வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம்,*
*55, கந்தசுவாமி கோவில் வீதி,*
*திருகோணமலை.*

(சி..........)

# ஆடம்பரப் பொருட்களுக்கான வற்வரி அரசால் அதிகரிப்பு

(கொழும்பு)

ஆடம்பரப் பொருட்களின் வற்வரி 18 வீதத்திலிருந்து 20 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இம்மாதம் இரண்டாம் திகதியில் இருந்து இது நடைமுறைக்கு வந்துள்ளது. மோட்டார்க்கார்,தொலைக்காட்சிப் பெட்டிகள்,வீடியோக் கமரா,குளிர்சாதனம், சலவை இயந்திரம், மணிக்கூடு, மதுபானங்கள்,இசை உபகரணங்கள், தங்க ஆபரணங்கள்,இனிப்பு, குளிர்பானங்கள், மின் உபகரணங்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. ஹோட்டல்களில் நடக்கும் களியாட்ட விழாக்களுக்கும் மேற் கூறியவற்வரி அமுல்படுத்தப்பட்டுள் ளது. மற்றும் பாரவூர்தி, உழவு இயந்திரம், பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு வற்வரி அறவிடப்படமாட்டாது.


## விண்ணப்பங்கள் கோரல்

சூழலியல் நல்லாட்சி ஆணையகம் பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சுற்றுச்சூழல் இணைப்பாளர்

2. செய்தித் தொகுப்பாளர்

கல்வித்தகைமை: – க. பொ. த. உயர்தரத்தில்உயிரியலில் 3 பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பிறதகைமைகள் – சூழலியல் சார்பான துறையில் அனுபவம், ஆற்றல் விரும்பத்தக்கது.

வயதெல்லை– 20–28

விண்ணப்ப முடிவுத் திகதி: – 20. 08. 2005

மேற்படி விண்ணப்பதாரி தபால் உறையின் இடது மேல் மூலையில் தமது பணிநிலையை குறிப்பிட்டு மனிதவள மேம்பாட்டுப்பகுதி என கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


தபால் அனுப்ப வேண்டிய முகவரி
சூழல் நல்லாட்சி ஆணையகம்,
திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகம்,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

தகவல்,
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
சூழல் நல்லாட்சி ஆணையகம்,
தமிழீழம்.

(6544)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பிதழும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 – 01 – 1926



மறைவு 19 – 07 – 2005

அமரர்

### சரவணமுத்து சிவஞானசுந்தரம்

பார்த்தீப வருஷம் 19.07.2005 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோர், அஞ்சலிகளை வெளியிட்டோர் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு,

சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் ஆடி மாதம் 31 ஆம் நாள் 16.08.2005) செவ்வாய்க்கிழமை இன்று கிளிநொச்சி இரணைமடு வாவியில் நடைபெற்று ஆவணி மாதம் 03 ஆம் நாள்(18.08.2005) வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் (இல.898,கட்சன் வீதி,வட்டக்கச்சி,கிளிநொச்சி) வீட்டுக்கிரியைகள் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும்மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.தனிப்பட்ட அழைப்பிதழாக இதனை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(6542) குடும்பத்தினர்.

## உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (நீகோட்)

### நிதி – ஆசிய அபிவிருத்தி வங்கி
### ஆஅவ கடன் இல:– 2084 – சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் – இல: 50

1 வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (NECORD - Ext) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2 இதன் பின்னால் தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|
| NEP/NECORD-Ext/ID/01& 02 | திருகோணமலை வரோதயநகரில் மூன்று மாடி விடுதிகள் இரண்டு நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 307,000/= |
| NEP/NECORD-Ext/AG/01 | வவுனியா விவசாய பாடசாலையில் விரிவு ரையாளர் மண்டபம், விடுதி நிர் மாணம் மற்றும் அலுவலக திருத்தவேலை. | M4 கட்டடங்கள் | 255,900/= |
| VA/NECORD-Ext/ID/01 | வவுனியா நகர கலாச்சார மண்டபம் நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 305,000/= |

3 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக் காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD டுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுபத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4 ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434. ∴பக்ஸ் :026-2227401. இணையத்தள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk)

6 கேள்வி ஆவணங்களை 16.08.2005 இலிருந்து 29.08.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5,000/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8 .பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 05.09.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9 .முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 25.08.2005 ஆம்திகதி அன்று காலை 11.30மணிக்கு நடைபெறும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.


*நா. புகேந்திரன்,*
*பதில் தலைவர், கேள்விச் சபை,*
*வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம்,*
*55, கந்தசுவாமி கோவில் வீதி,*
*திருகோணமலை.*

(சி.12528)

# மாவட்டங்களுக்கிடையிலான தடகளப் போட்டி

## தாரணி, ரதீசன் புதிய சாதனை





வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டங்களுக்கிடையில் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் திருமலை மாவட்டம் 104 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. நேற்று முன் தினம் யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தடகளப் போட்டியில் இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே யாழ்ப்பாண மாவட்டம் 87 புள்ளி, மன்னார் மாவட்டம் 45 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

இந்தப் போட்டியில் நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் இடங்களை முறையே வவுனியா, அம்பாறை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களும் பெற்றுக்கொண்டன.

நேற்று நடைபெற்ற இறுதி நாள் போட்டிகளில் இரு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. பெண்களுக்கான ஈட்டியெறிதல் போட்டியில் 2002ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட வீராங்கனை கே. மனோ ரூபியினால் நிலை நாட்டப்பட்ட 30.31 மீற்றர் தூரம் என்ற சாதனையை கிளிநொச்சி மாவட்ட வீராங்கனை எஸ். தாரணி 33.19 மீற்றர் தூரம் ஏறிந்து முறியடித்தார்.

ஆண்களுக்கான கோலுன்றிப் பாய்தல் போட்டியில் 2003ஆம் ஆண்டு நிலைநாட்டப்பட்ட தனது சாதனையை திருமலை மாவட்ட வீரர் ரதீசன் 3.15 மீற்றர் உயரத்தினைத் தாண்டி புதிய சாதனையை நிலைநாட்டினார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கிடையில் நடத்தப்பட்ட சகல விளையாட்டுப் போட்டிகளிலும் யாழ். மாவட்ட அணி 141 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

திருமலை மாவட்டம் 85 புள்ளிகளையும், மட்டக்களப்பு மாவட்டம் 66 புள்ளிகளையும் பெற்று இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் இடங்களை முறையே வவுனியா மன்னார், அம்பாறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களும் பெற்றுக்கொண்டன. (கீ)

# 5000,10000 மீற்றர் போட்டி

## எத்தியோப்பிய வீராங்கனை சாதனை



உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் டிருனேஷ்டிபாபா ஐயாயிரம், பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கம் வென்று புதிய சாதனை படைத்துள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் உலகத் தடகள சம்பியன்ஷிப் தொடர் பின்லாந்தின், ஹெல்சின்கி நகரில் நடக்கிறது. பெண்களுக்கான ஐயாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. இதில் எத்தியோப்பியா வின் 19 வயதான டிருனேஷ்டி பாபா 14 நிமிடம் 38.59 வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்றார். முன்னதாக இவர் 10,000 மீற்றர் ஓட்டப் போட்டியிலும், தங்கம் வென்றுள்ளார். இதன் மூலம் ஒரே தொடரில் இரு பிரிவுகளிலும், (5000மற்றும் 10.000 மீற்றர்) தங்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற புதிய சாதனை படைத்தார்.

4x100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முனா, லீலாரின், வில்லியம்ஸ், மிலிசா பார்பர், அன்கிலா டைகிள் ஆகியோர் அடங்கிய அமெரிக்க அணி தங்கம் வென்றது. இவர்கள் போட்டித் தூரத்தை 41.79 வினாடிகளில் கடந்தனர். ஆண்களுக்கான 4X100 மீற்றர் ஓட்டப் பிரிவில் ரொனால்ட் போக்னன், டகோர், டிவோய் லிபின் ஆகியோர் அடங்கிய, பிரான்ஸ் அணி 38.08 வினாடிகளில் கடந்து தங்கம் கைப்பற்றியது.

# பெண்களுக்கான மரதன் ஓட்டம்

## பௌலாறடிக்கிளிப்ஸ் வெற்றி




ஹெல்சிங்கியில் நடைபெறும் உலக மெய்வல்லுநர் போட்டித் தொடரில் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் பிரிட்டிஷ் வீராங்கனை பௌலாறடிக்கிளிப்ஸ் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் குறிப்பிட்ட தூரத்தை இரண்டு மணி 20 நிமிடம் 57 செக்கனில் ஓடினார். இவருக்கு அடுத்தபடியாக ருமேனியாவின் கொன்ஸ்டரினா இரண்டு மணி 23 நிமிடம் 19 செக்கனில் கடந்து இரண்டாமிடத்தையும் பெற்றார். தற்போதைய சம்பியனான கென்யாவின் கெத்தரினா என்டெரோபாவை விட 64 செக் கன்கள் குறைவாக எடுத்து பௌலா-இச்சாதனையை எட்டியுள்ளார். ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் இவர் இந்தப் போட்டியில் தோல்வியடைந்ததால் கணவனும் பெற்றோரும் மிக வேதனைப்பட்டனர். ஆனால் தற்போது கணவர் சந்தோஷப்படுவார் மற்றும் ரசிகர்களுக்கும் இது ஒரு நிவாரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இங்லீஷ் பிரீமியர் லீக்

## மான்செஸ்டர் அணி வெற்றி

இங்லீஷ் பிரிமியர் லீக் கால்பந்து தொடரில் மான்செஸ்டர் யுனைடெட் அணி எவர்டன் கழகத்தை வீழ்த்தியது. முன்னணி கழக அணிகள் மோதும் இங்லீஷ் பிரிமியர் லீக் கால்பந்துத் தொடர் இங்கிலாந்தின் பல்வேறு இடங்களிலும் நடக்கிறது. லீவர்பூல் நகரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட், எவர்டன் அணிகள் மோதின. விறு விறுப்பாக நடந்த இப்போட்டியில் மான்செஸ்டர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நட்சத்திர வீரர்களான வான் நிஸ்டல்ராய், ரூனே தலா ஒரு கோல் அடித்தனர். சம்பியன்ஸ் லீக் கோப்பையை வென்ற லீவர்பூல் அணி, மிடில்ஸ்பிரோவை சமன் செய்தது. இப்போட்டியில் இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்கவில்லை.



# ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ்

## இறுதிப்போட்டியில் நாடல்-அகாஸி



அனுபவம் மிக்க வீரர் ஆந்த்ரே அகாஸி, துடிப்பான இளம் வீரர் ராபெல் நாடல் ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் இறுதிப்போட்டியில் சந்திக்கிறார்கள். முன்னணி வீரர்கள் மோதும் ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் தொடர் கனடா நாட்டின், மொன்றியயில் நகரில் நடக்கிறது. அரையிறுதிப் போட்டிகள் கடந்த சனியன்று நடந்தன. 35 வயது மூத்த வீரரான அமெரிக்காவின் ஆந்த்ரே அகாஸி 6-4,6-4 என்ற சுலப செட்களில் பிரிட்டன் வீரர் கிரெக் ருசெட்ஸ்கியை வென்றார்.

மற்றொரு அரையிறுதியில் 19 வயது இளம் வீரரான ஸ்பெயின் நாட்டின் ராபெல் நாடல் 6-4, 7-5 என்ற செட்களில் பிரான்ஸ் வீரர் பால் ஹெண்றி மேத்யூவை வீழ்த்தினார். இறுதிப்போட்டியில் அகாஸி ராபெல் சந்திப்பதால் போட்டி எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. ஒருவர் அனுபவம் வாய்ந்த மூத்த வீரர் கடந்த காலத்தில் சாதனைகளைக் குவித்தவர். மற்றவர் இளம் வீரர் எதிர்காலத்தில சாதிக்கக் காத்திருப்பவர். யார் ஜெயிக்கப் போகிறார்கள் இறுதியில் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே எழுந்துள்ளது.

# பரபரப்பான இறுதி நாள் ஆட்டம்;

## மயிரிழையில் தப்பிப்பிழைத்தது அவுஸ்திரேலிய அணி



இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஓல்ட்ராப் பேட்டில் நடைபெற்றுவந்த ஆஷஸ் கிண்ணத்துக்கான மூன்றாவது டெஸ்ட் போட்டி பெரும் பரபரப்பின் மத்தியில் எத்தரப்புக்கும் வெற்றி தோல்வியின்றி நிறைவு பெற்றது. அவுஸ்திரேலிய அணி மயிரிழையில் தப்பிப்பிழைத்தது.

423 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலியா அணி இறுதி நாளான நேற்று விக்கெட் இழப்பின்றி 24 ஓட்டங்களுடன் ஆட்டத் எ ந் தொடர்ந்த அவுஸ்திரேலியா அ த் தலைவர் ரிக்கி பொண்டிங்கின் பெ.றுப்பு வாய்ந்த ஆட்டம் அணியை தோல்வியில் இருந்து மீட்டதுடன் இங்கிலாந்தின் வெற்றிவாய்ப்பும் கைநழுவிப் போனது. இறுதி நாள் ஆட்ட நேர முடிவில் ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 371 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங்கின் நிதானமான ஆட்டம் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடையக் காரணமாகியது. பொண்டிங் 156 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் வோர்ன் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் பிளிண்டொப் நான்கு விக்கெட்டுக்களையும், ஹொக்காட் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து முதலாவது இனிங்ஸ் - 444 ஓட்டம், அவுஸ். முதலாவது இனிங்ஸ் - 302 ஓட்டம், இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸ் - ஆறு விக்கெட் இழப்பிற்கு 280 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# எதிர்கால...

வரவேண்டும்.பின்னர் சர்வதேச போட்டிகளில் நுழைவது இலகுவானது எனக் கூறும் அவர், கொஞ்சம்கொஞ்சமாக முன்னேறு வோம் என அமைதியாக கூறுகின்றார். விடாமுயற்சியும் இலக்கொன்றை நோக்கி பொறுமையுடன் முன்னேறும் சாதனைவீர் சாதிக்க வாழ்த்துக்கள்.

**வெற்றி குறித்துத் தந்தையார் சகாயரட்ண ராஜா தெரிவிக்கையில்;**

மகனின் சாதனையை எண்ணிப்பெருமை அடைகிறேன். இது போதாது இன்னும் உயர்ந்து பல சாதனைகளைச் செய்வதுடன் ஒலிம்பிக்வரை சென்று தமிழருக்கும் தமிழர் தேசத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்கிறார். இதற்குப் பயிற்சியாளர் வழிநடத்துவார் என்கிறார்.

**தாயார் சத்தியவதி தெரிவிக்கையில்,**

விளையாட்டில் சம்பியனாக இருப்பது எங்களுக்குப் பெருமை. அவர் இதில் வளர்ந்து மேலும் சாதனை படைக்க வேண்டும். அதற்காக அவருக்கான சத்துணவுகளைக் கொடுப்பதே எங்கள் பணி. அதற்கு மேலாக அவரும், அவரது பயிற்சியாளருமே என்கிறார்.

**பயிற்சியாளர் முகுந்தன் தெரிவிக்கையில்,**

நான் கஷ்ரப்பட்டது என்பதைவிட அவர் எனக்குக் கொடுத்த ஒத்துழைப்பு மிக மிக முக்கியமானது. ஒரு வீரருக்கு பயிற்சி அளிப்பதைவிட தொடர்ந்தும் பயிற்சியில் ஈடுபட வைப்பதுதான் முக்கியமானது.

எங்கள் பிரதேசத்தைப் பொறுத்தவரை அந்த வழமை உருவாக்கப்படவில்லை. இந்த நிலையில் நிரஞ்சன் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

இப்போது இவரைப் பின்பற்றி அதிக வீரர்கள் இணைந்துள்ளனர். இணைந்துகொண்டும் வருகின்றனர். இவர்கள் தொடர் பயிற்சி மூலம் நல்ல நிலையை அடையலாம் என்பதற்கு நிரஞ்சன் காரணமாக இருக்கின்றார்.

இதனைவிட அவரது எதிர்காலம் நீண்டது. தற்போது அவர் ஏற்படுத்திய சாதனைகள் ஆரம்பப் படிநிலையே அவர் இன்னும் நீண்ட பயணம் செல்லவேண்டும். தற்போது அவருடைய நேரப்பெறுதி,உடல்வாகு என்பன எதிர்காலத்தில் அவரை உலகில் சிறந்த ஒரு வீரராக்கும் என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றது. ஆகவே இவர் இவ்வளவு காலமும் செய்த எவ்வித முயற்சி பயிற்சி என்பதைவிட இனி வருங்காலங்களில் அவர் முழுமையாக தன்னை அர்ப்பணிக்க வேண்டியிருக்கும் என நினைக்கின்றேன்.


அத்துடன் இவரது முயற்சி ஏனைய வீரர்களுக்குப் பாடமாக இருப்பதுடன் தொடர் பயிற்சி மூலம் எதையும் சாதிக்கலாம் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

அதாவது நிரஞ்சன் கடைசியாக தங்கப் பதக்கம் வெல்லும் வரைக்கும் சுகததாஸ விளையாட்டரங்கிலுள்ள சுவட்டில் முப்பது தடவைக்கு மேல் ஓடியிருப்பார். இதுவே அவர் வெற்றிபெறவும் காரணமாக அமைந்தது.

ஒரு தடவை அல்ல. தொடர்ச்சியாக தோல்வி மேல் தோல்வியைச் சந்தித்த பின் தான் அவரால் வெற்றியை ஈட்ட முடிந்தது.

இப்படித்தான் பயிற்சியாளர்கள் விடாது முயற்சி செய்துகொண்டிருக்க வேண்டும். இதற்கு வசதிகள் மிக முக்கியமானதுதான். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் இருக்கின்ற வசதியையும், அறிவையும் கொண்டு திட்டமிட்ட ரீதியில் வீரர்களை வழிநடத்த வேண்டும் என்று நினைக்கின்றேன் என்றார்.

## சிந்தனைக்கு



வன்முறையை மென்முறையால் வெற்றிகொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால் தான், நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மெல்ல மெல்ல நழுவிச் செல்லும்.....!

இலங்கையில் சமாதானச் சூழ்நிலை மெல்ல மெல்ல நழுவிச் செல்வது போன்றதொரு நிலை ஏற்பட்டு வருகின்றது. இதனை அரசாங்கத்தினதும், அதன் ஆயுதப்படைகளினதும் நடவடிக்கைகள் தெளிவாகவே கட்டியம் கூறுபவையாகவுள்ளன.

சமாதானத்தின் மீதான நம்பிக்கையிழப்பு தற்பொழுதுதான் ஏற்பட்டதென்பதல்ல. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கவிழ்த்து ஜே.வி.பி யுடன் கூட்டாகக் கட்சி அமைத்தபோதே ஏற்பட்டதொன்றுதான்.

ஏனெனில் சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இனப்பிரச்சினை விடயத்தில் சுமார் ஓராண்டுகாலம் பேச்சு நடத்தியும் இணக்கம் காணப்படவில்லை. இந்நிலையில், ஆட்சி அதிகாரத்தை அக்கூட்டணி கைப்பற்றியபோதே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்று சாத்தியமாகும் என எவரும் நம்பவில்லை.

இதனை உறுதிப்படுத்துமாப்போன்றே இனப்பிரச்சினைக்கு அப்பாற்பட்ட மனிதாபிமானப் பிரச்சினை எழுந்தபோது ஜே.வி.பி அதைத் தீவிரமாக எதிர்த்தது. சுதந்திரக் கட்சி நாட்டின் நலன்கருதி இதனை ஏற்றுக்கொள்ள முடியாத நிர்ப்பந்தத்தில் இருந்தது. இந்நிலையில் ஜே.வி.பி அரசாங்கத்தைவிட்டு வெளியேறியிருந்தது.

இது ஒருபுறம் இருக்க, கிழக்கு மாகாணத்தில் தொடராக இடம்பெற்று வந்த சம்பவங்களும் யுத்தநிறுத்தத்தின் ஆயுள் குறித்த கேள்வியை எழச் செய்வதாகவே இருந்தன. குறிப்பாக விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள், அவர்களின் காரியாலயங்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றால் கிழக்கில் நிலைமை மோசமாகிச் சென்றது.

இதற்கும் அப்பால் திருமலை நகரசபைக்குச் சொந்தமான நிலப்பரப்பில் திடீரென முளைத்த புத்தர்சிலையை அகற்ற அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளாமையானது அரசாங்கம் பதற்றத்தை ஏற்படுத்த அன்றிப் பதற்றத்தைத் தணியவிடக்கூடாது என்ற ரீதியில் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது என்பதை உணர்த்துவதாய் இருந்தது.

இந்த வகையில் யுத்த நிறுத்த உடன்பாடும், இயல்புவாழ்வும் கேள்விக்குள்ளாகியிருந்த நிலையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதை சாட்டாகக்கொண்டு மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் வகையிலும், யுத்தநிறுத்தத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் சந்திரிகா அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.


பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தல், கொலையுடன் தொடர்புடையவர்களைத் தேடிப்பிடித்தல் என்ற ரீதியில் அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்தி அடாவடித்தனமான படைநடவடிக்கைகளுக்கான வழிகளை சனாதிபதி சந்திரிகா திறந்துவிட்டுள்ளார் எனலாம்.

இதன் விளைவாக தற்பொழுது கொழும்பு உட்பட இலங்கையின் பல பாகங்களும் சோதனை நடவடிக்கைகள், தேடுதல் நடவடிக்கைகள் என்ற ரீதியில் பொதுமக்களுக்கு குறிப்பாக தமிழருக்கு பெரும் இடையூறுகளை விளைவிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு, பாதுகாப்பு பலப்படுத்தல் என்ற ரீதியில், புதிய காவலரண்களும் அமைக்கப்படுகின்றன.

இது ஒருபுறம் இருக்க, தமிழ் இளைஞர்கள் பலர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டும உள்ளனர். இக் கைதுகள் கொழும்பில் மட்டுமல்ல கிழக்கிலும் இடம்பெற்று வருகின்றமை அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து விரைவாக விலகிச் செல்வதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

இவை ஒரு புறம் இருக்க, சோதனைச் சாவடிகள் மூடப்படுவதும், போராளிகள், பொதுமக்களின் போக்குவரத்திற்குத் தடைவிதிப்பதும் அரசாங்கம் விரைந்து யுத்தம் நோக்கிச் செல்ல விளைவதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாகும். ஏனெனில் இத்தகைய நடவடிக்கைகள் யுத்த நிறுத்த உடன்பாட்டை அப்பட்டமாக மீறும் செயலாக மட்டுமல்ல, முறுகல் நிலையைத் தோற்றிவிப்பதற்குமான நடவடிக்கைகளும் ஆகும்.

இந்த வகையில், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் படிப்படியாக அமைதிச் சூழ்நிலையைக்கெடுத்து இயல்பு சூழ்நிலையை இல்லாதொழிக்கும் நோக்கில் செயற்படுவதாகவே கொள்ளத்தக்கது. ஆகையால் அரசாங்கத்தின் இப்போக்கிற்கு கதிர்காமர் கொல்லப்பட்டதே காரணம் என யாராவது கருதுவார்களேயானால் அவர்கள் சிறுபிள்ளைத்தனம் மிக்கவர்களாகவே இருப்பர். ஏனெனில் நாட்டில் பதற்றத்தை தோற்றுவிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு கதிர்காமரின் கொலை ஒரு சந்தர்ப்பமே ஒழிய காரணமல்ல.




# கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகளுக்கு சிறிலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும்

- கூட்டமைப்பு பா.உ.ஜோசப் பரராஜசிங்கம்

கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகளுக்கு சிறிலங்கா அரசே பொறுப்பு என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வானொலி ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற கொலைகளுக்கு சிறிலங்கா அரசே பொறுப்பு என்று கூறவேண்டும். அதற்கான காரணம் என்னவெனில், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் எட்டாவது சரத்தில் முதலாவது பகுதியில் கூறியிருப்பது போன்று, யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்ட 30 நாட்களுக்குள் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருந்தால் இதுபோன்ற கொலைகள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றிருக்காது.

விடுதலைப்புலிகளும் இதனைத் தான் நோர்வே பிரதிநிதிகள் ஊடாக சிறிலங்கா அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். அதே வேளை கண்காணிப்புக் குழுவினரிடம் பலமுறை முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட சிறிலங்கா பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி அந்த எட்டாவது சரத்தின் முதலாவது பகுதியை உடனடியாக அரசு காலதாமதமானாலும் அதனை நிறைவேற்ற முன்வரும் பட்சத்தில் கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகள் கண்டிப்பாக நிறுத்தப்படும் என்றார்.

# கொலையுடன் சம்பந்தப்பட்டோர் குறித்து ஆராய வடக்கு கிழக்கிற்கு புலனாய்வு அதிகாரிகள்

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்களை அறிவதற்காக இராணுவ மற்றும் உயர் பொலிஸ் புலனாய்வுக் குழுக்கள் வடக்கு மற்றும் கிழக்கிற்கு சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அரச கட்டுப்பாடற்ற பகுதிகள் உட்பட பல இடங்களிலும் தகவல்களைத் திரட்டுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புலனாய்வுக்குழுக்கள் நேற்று முன்தினம் காலை கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ளன. கொலையாளிகள் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள் பிரவேசித்துள்ளனரா? என்பது குறித்து அவர்கள் ஆராய்வார்கள்.

அமைச்சர் கொலை செய்யப்பட்டதையடுத்து உடனடியாக கொழும்பிற்குள் பிரவேசிக்கும் இடங்கள் மற்றும் வெளியேறும் இடங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதனால் தாக்குதல் நடத்தியோர் அவ்வளவு விரைவில் கொழும்பை விட்டு வெளியேறியிருக்க முடியாது. அவர்கள் பற்றிய தகவல்களை அறியும் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவே புலனாய்வுப் பிரிவினர் வடக்கு கிழக்கிற்கு அனுப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# கதிர்காமரின் வீட்டிற்கு அருகிலுள்ள வீடுகள் ஒரு போதும் சோதனையிடப்படவில்லை

### இது பாதுகாப்புப் பலவீனத்தைக்காட்டுவதாகத் தெரிவிப்பு

லக்ஷ்மன் கதிர்காமருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மிகவும் பலவீனமான நிலையில் இருந்ததால் கொலையாளிகள் அவரை இலகுவாகக் கொலை செய்துள்ளனர் என படை முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் உள்ள அமைச்சரின சொந்த வீட்டிற்கு அருகே இருக்கும் இரண்டு வீடுகளையும் ஒருபோதும் சோதனையிடாதது அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு எத்தகையது என்பதனைக் காட்டுகிறது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அமைச்சர் கதிர்காமரின் மீது துப்பாக்கப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட அயல் வீட்டின் மேல்மாடி மாத்திரம பலகாலமாக மூடப்பட்டிருந்துள்ளது.

அயல் வீட்டு உரிமையாளரான லக்ஷ்மன் தளையசிங்கம் என்பவர் மதுவிற்கு அடிமையானவர் என்றும் அவரின் மனைவி பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவர் என்றும் கூறப்படுகிறது. இவ்விருவரும் வீட்டின் கீழ்மாடியிலேயே வசித்து வந்துள்ளனர்.

தளையசிங்கம் என்பவரின் வீட்டின் மாடியிலிருந்து பார்க்கும் போது லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டு நீச்சல் தடாகம் தெரியும் வகையில் உள்ளது. அத்துடன் அமைச்சர் நாளாந்தம் உடற்பயிற்சியாக நீந்தும் பழக்கம் உடையவர் என்றும் கூறப்படுகிறது.

அமைச்சருக்கு உரிய பாதுகாப்பு வழங்கபபட்டிருந்தால் அயல் வீடுகளை சோதனையிடாதது ஏன் என்றும் படை முக்கியஸ்தர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கதிர்காமரின் பாதுகாப்பிற்கென 150 விசேட அதிரடிப்படையினர், அமைச்சர் பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் தனியார் பாதுகாப்புப்பிரிவினர். ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அமைச்சர் கதிர்காமர் மீது ஏதேனும் தாக்குதல் நடத்தப்பட்டால் அவரைப் பாதுகாக்கும் வழிகள் பற்றி இவ்வனைவரும் பயிற்சி பெற்றிருந்தனர். எனினும் அவருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய இடங்கள் பற்றி ஆராய்வதற்கு எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

அமைச்சர் கதிர்காமர் பயணம் மேற்கொள்கையில் அவர் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்ததால் அவர் வெளியே செல்லும் நேரங்களில் அவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கதிர்காமருக்கு துக்கம் அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பில் வர்த்தகர்களுக்கு மிரட்டல்

## -எச்சரிக்கைக் கடிதங்களையும் படையினர் அனுப்பினர்

கொல்லப்பட்ட சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு துக்கம் அனுஷ்டிக்குமாறு வற்புறுத்தி சிறிலங்கா படையினரும், விசேட அதிரடிப் படையினரும் மட்டக்களப்பில் மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் கொலை அச்சுறுத்தலை விடுத்துள்ளனர். வர்த்தக நிலையங்கள் யாவற்றையும் பூட்டி துக்கம் கடைப்பிடிக்குமாறு மிரட்டும் துண்டுப் பிரசுரங்களை மட்டக்களப்பு நகர வர்த்தகர்களுக்கு அனுப்பியுள்ள சிறிலங்காப் படையினர், அதனை மீறித் திறக்கப்படும் கடைகளுக்கு கைக்குண்டுகளை வீசப் போவதாகவும் எச்சரித்திருந்தனர்.

ஆயினும், மட்டக்களப்பு நகரில் வர்த்தக நிலையங்கள் யாவும் திறந்திருந்தன. அரச அலுவலகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள், என்பன வழமை போன்று இயங்கின. இதனையடுத்து ஒவ்வொரு வர்த்தக நிலையத்திற்கும் சென்ற விசேட அதிரடிப் படையினர் திறந்த வர்த்தக நிலையங்களை உடன் மூடுமாறு மிரட்டியுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி வர்த்தக சங்கத் தலைவருக்கு இவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள விசேட அதிரடிப்படையினர் அத்துடன் துப்பாக்கி ரவைகளையும் அனுப்பி வைத்துள்ளனர். இந்த அச்சுறுத்தல்களினால் வர்த்தகர்களும் பொதுமக்களும் பீதியுற்றுள்ளனர்.

கதிர்காமருக்கு துக்கம் கடைப்பிடிக்கும் முகமாக மட்டக்களப்பு சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. அதிரடிப் படையினர் மணிக்கூட்டுக் கோபுரத்தில் பதாகை ஒன்றை கட்டி வைத்துள்ளனர்.

# அன்ரன் பாலசிங்கத்தை நாடுகடத்த வேண்டுமாம்

## ஜாதிகஹெல உறுமய பிரிட்டனுக்கு மகஜர்

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களை நாடுகடத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரித்தானியத் தூதுவருக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலியே ரத்ன தேரர் தலைமையில் நேற்று பிரித்தானிய தூதரகத்திற்குச் சென்ற ஜாதிக ஹெல உறுமயவினர் அங்கு பிரித்தானிய தூதுவர் ஸ்ரிபன் இவான்சுக்கான மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

இந்த மகஜரில் பிரிட்டனில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை இலங்கைக்கு நாடு கடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் அமுல் செய்யப்பட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான சட்டத்தின் கீழ் அன்ரன் பாலசிங்கத்தை கைது செய்து நாடுகடத்தவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

# லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு ஜே.வி.பியின் செயற்பாடே காரணம்

## ராஜிதசேனாரட்ண தெரிவிப்பு

சமாதானப் பற்றுள்ள ஒரு கட்சி என்ற வகையில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் உண்மையிலேயே கவலைப்படக்கூடியது ஐக்கியதேசியக் கட்சியே என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். கெரில்லா அமைப்பொன்றின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதாயின் அவர்களுடன் சிற்சில உடன்பாடுகளுக்குச் செல்ல வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் யுத்த நிறுத்தத்திற்கு வந்து இரண்டரை ஆண்டு காலமாக நாட்டில் அமைதியான சூழலை தோற்றுவித்தது. 42 ஆயிரத்திற்கு அதிகமான பாதுகாப்புத் தரப்பினரின் மரணத்தை 641 வரை குறைத்தது இந் நடவடிக்கைகளே. இதில் 600 பேர்வரை இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரே கொலையுண்டுள்ளனர்.

யுத்த நிறுத்தத்தின் மூலம் வீதித் தடுப்புக்கள் நீக்கப்பட்டு இயல்பு நிலை கொண்டுவரப்பட்டதே கொலைக்குக் காரணம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கிறது. எனினும் மத்திய வங்கி, கொலன்னாவ எண்ணைக் குதம், ரெலிக்கொம் நிறுவனம் முதலான தாக்குதல்களுக்காக குண்டுகள் கொண்டு வரப்பட்டது வீதித் தடுப்புக்கள் இருந்த போதே. நடைமுறை அரசாங்கம் போன்றே சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டுவர எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணி இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். சமாதானத்தை முன்கொண்டு செல்லாமையே இதற்கு முக்கிய காரணியாகும் என்றார்.(32)

### சிறிலங்காவின்.....

வால் அமைக்கப்பட்டுள்ள கூட்டமைப்பின் தலைவராக செயற்படும் ஆனந்தசங்கரி வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டால் சர்வதேச ரீதியில் விடுலைப்புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை முனைப்புடன் முன்னெடுப்பார் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும், இது இலங்கை அரசாங்கத்திற்கும் அனுகூலமானது என்பதால் அரசாங்கத்தில் உள்ள அடிப்படைவாத சக்திகள் இந்த நியமனத்திற்கு ஆதரவு தெரிவிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனந்தசங்கரியே வெளிநாட்டமைச்சராவதற்கு பொருத்தமானவர் என்று தேசிய பிக்குமார் ஒன்றியத்தின் பேச்சாளர் வட்டவள பிறேமவன்ச தேரர் கூறியுள்ளார்.ஆனந்தசங்கரியே விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதற்குப் பொருத்தமானவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் இடத்தை நிரப்புவதற்கு ஆனந்தசங்கரியே பொருத்தமானவர் என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரரும் தெரிவித்துள்ளார். இதேவேளை ஆனந்தசங்கரியிடம் இது குறித்து தொடர்பு கொண்டு கேட்டபோது தமக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவும் வெளிநாட்டமைச்சர் பதவியை பெறுவதற்கு முயற்சிப்பதாகத் தெரிய வந்துள்ளது. (32)

### கைக்குண்டு.....

தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. எனினும் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

### சர்வதேச.....

நுழைய் முற்பட்டனர்.

இதனையடுத்து அங்கு தங்கியிருந்த மாணவர்களும், அலுவலகர்களும் கிளர்ந்தெழுந்ததைத் தொடர்ந்து அங்கிருந்து இராணுவம் விலகிச் சென்றுவிட்டது.

இது தொடர்பாக மாணவர் பேரவையினர் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முறையிட்டதைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அங்கு வந்த கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (33, 27)

### கதிர்காமரின்.....

நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன்பீற்றர்சன் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் நட்வார்சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி உட்பட பல பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னதாக அமைச்சரின் பூதவுடல் அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து பிற்பகல் மூன்று மணிக்கு பூரண இராணுவ மரியாதையுடன் சுதந்திர சதுக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இறுதி நிகழ்வில் சனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அரச மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர். (32)

### வெடி.....

பட்டு நேற்று மாலை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், நேற்றுக்காலை குடாக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுவிட்டு கரை திரும்பிக்கொண்டிருந்த மீனவர்களது படகொன்று குருநகர் இறங்குதுறையில் சோதனைககு உள்ளாக்கப்பட்ட வேளையிலேயே இவ்வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் டெற்றனேட்டர்கள் மற்றும் டைனமற்றுக்கள் என்பன கடத்திவரப்பட்டபோது கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் யாழ். பொலிஸ் நிலைய தகவல்கள் கூறுகின்றன .

எனினும் குடாக்கடற்பரப்பிலுள்ள மண் திட்டியொன்றில் அநாதரவாகக் கிடந்த வெடிபொருட்கள் பொலிசாரிடம் ஒப்படைக்க எடுத்து வந்த வேளையிலே தாம் கைது செய்யப்பட்டதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை யாழ். நீதவானின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட மீனவர்கள் மூவரில் வெடிபொருளை வைத்திருந்ததாகக் கூறப்படும் றெஜினோட்யூட் நிக்சன் எனும் நபரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் ஏனைய இரு மீனவர்களையும் தலா இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லவும் நீதவான் த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கைப்பற்றப்பட்ட வெடிபொர்ருட்களை பொலிஸ் காவலில் வைக்கவும் பணிக்கப்பட்டுள்ளது. முன்னரும் ஒரு தடவை இவ்வாறு வெடிபொருட்களுடன் மீனவர் படகொன்று கைபபற்றப்பட்டு பின் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

### முதலாவது.....

ளார்.

எனவே அதற்கு அமைய விரைவில் தாம் அடுத்த சனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிக்கவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 31.2 ஆம் பந்திப்பின்படி பதவியில் உள்ள சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு குறையாமலும் இரண்டு மாதத்திற்கு கூடாமலும் உள்ள காலப்பகுதியில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட வேண்டும். இந்த நிலையில் அதற்கு அமைய தாம் தமது பணிகளை முன்னெடுத்துச்செல்வதாகவும் தயானந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய 2005 ஆம் ஆண்டில் சனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான உத்தரவை தேர்தல் ஆணையாளர் பிறப்பிக்க வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்த மனுவுக்கு பதில் அளிக்கும் வகையிலேயே தேர்தல் ஆணையாளர் இந்தப் பதிலை நேற்று வழங்கினார் (32)

### கதிர்காமர்...

தெரிவித்துள்ளார்.

கதிர்காமரின் கொலைக்கு விடுதலைப்புலிகளே காரணமென அரசாங்கம் மற்றும் படைத்தரப்பு தொடர்ந்தும் குற்றஞ்சாட்டிவரும் நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கொலைச் சம்பவங்கள் இடம்பெறும்போது எழுந்தமானமாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது வழக்கம்.

ஆனால் விடுதலைப்புலிகள்தான் இந்த கொலைக்கு காரணமென்று இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள போது, அரசதரப்பினர் விடுதலைப் புலிகள் மீது இவ்வாறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவது போர் நிறுத்தத்தை பாதிக்கும்.

கதிர்காமரின் கொலைச் சம்பவம் கண்டிக்கத்தக்கது. இந்தக் கொலைக்கு காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இந்தக் கொலை தொடர்பான உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காணப்படும் வரை எந்தவொரு தரப்பினரையும் குற்றஞ்சாட்டாமல் இருப்பதே சிறந்ததென்று அவர் மேலும் தெரிவித்தார்.

## துயர் பகிர்வோம்



## கிருபாமூர்த்தி சறோஜாதே வி

எமது நிறுவனத்தில் பணிபுரியும் நா.சிறீதரனின் மாமியாரான கிருபாமூர்த்தி சறோஜாதேவி 14.08.2005 சாவடைந்து விட்டார். அவருக்கு எம் கண்ணீரஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பணிப்பாளர், பணியாளர்கள்,*

*ஈழநாதம்.*

## சாவு அறிவித்தல்



## கிருபாமூர்த்தி சறோஜாதே வி

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவை வசிப்பிடமாகவும், தற்பொழுது இல:10, ஜெயநந்திநகர், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட கிருபாமூர்த்தி சறோஜாதேவி அவர்கள் 14.08.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் கிருபாமூர்த்தியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் அகிலாண்டேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லத்துரை தம்பதியினரின் மருமகளும் புஸ்பகாந்தா, ஜெய்கசன் (கிளிநொச்சி), திருவேணி (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் வருட மாணவி), செந்துஜா (போராளி அருள்பிரியா), வேதா (கல்வியியற்கல்லூரி வவுனியா முதலாம் வருட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் (16.08.2005) இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(6545)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.